

Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 21 இதழ் - 11 நவம்பர் 2008

## கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

✆ 04257 - 230030, Cell : 98427 - 30382, 99655 - 30385
E-mail : kangayamcofc@eth.net

# உங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் வேண்டும்

கடந்த 15,16 ஆண்டுகளாக **திருமறை ஆசான்** மாத இதழில் வெளிவந்த என்னுடைய **ஆசிரியர் உரை** களைத் தொகுத்து, 2 (அ) 3 நூல்களாக வெளியிட விரும்புகிறேன். அதற்கு முன்பாக, வாசகர்களாகிய உங்களுக்கு இது எந்தளவு பயனுள்ளதாக இருக்குமென்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

இவ்விலக்கியப்பணிக்கு, பரலோக தேவனுடைய தயவோடு, உங்களது ஆலோசனைகளும், ஊக்கமும், பொருளாதார ஒத்துழைப்பும் அத்தியாவசியம்.

ஆகையால், தனிப்பட்ட முறையிலும், குழுவாகவும், சபையாகவும் நீங்கள் எப்படிப் பங்களிக்க முடியுமென்பதைத் தெரிவித்து, இப்பணியைத் தாங்குமாறு ஜெபத்தோடு வேண்டுகிறேன்.

**உங்கள் கருத்துக்களை எதிர்பார்க்கும்,**

**ஆசிரியர்.**

## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. தேவனுடைய வேலையை ஒருமித்து செய்வதெப்படி? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 15
4. வாலிபர் பகுதி ........ 18
5. சிறுவர் பகுதி ........ 22
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 24
7. எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது ........ 28

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 21 NOVEMBER - 2008 Issue - 11**

ஆசிரியர் உரை

## "...சீடர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்"

ஒரு தலைமையின் கீழோ, ஒரு கொள்கையின் மீதோ, ஓர் இயக்கத்தின் பேரிலோ அல்லது ஒரு நம்பிக்கையின் முறைமையிலோ தங்களை ஈடுபடுத்தியிருப்பவர்கள், காலப்போக்கில் ஏதாவதொரு காரணத்தினிமித்தம் அந்தத் தலைமையின் கீழிலிருந்தோ, அதன் கொள்கைப்பிடிப்பிலிருந்தோ, அவ்வியக்கப் பற்றிலிருந்தோ அல்லது அந்த நம்பிக்கையின் முறையிலிருந்தோ தங்களை விடுவித்துக் கொள்வது, ஏதோ நம்முடைய நாட்களில் மட்டும் நடக்கும் விபரீதம் என்று நாம் எண்ணிவிடக் கூடாது. காலம் தொட்டே இப்படித்தான் இருந்து வருகிறது. சமுதாயம் இதைச் சிரமமில்லாமல் ஏற்று சீரணித்துக் கொள்கிறது. ஆயினும், இப்படி விடுவித்துக் கொள்ளும் எல்லோருக்கும் சமுதாயமும் ஒரே விதமான விமர்சனத்தையோ அல்லது அர்ச்சனையையோ வழங்குவதில்லை. ஆம், அவர்கள் தங்கள் தலைமையை மாற்றிக்கொண்டார்கள் என்றும், கொள்கையிலிருந்து விலகிவிட்டார்கள் என்றும், இயக்கத்தைக் கைவிட்டார்கள் என்றும், நம்பிக்கையிலிருந்து பின் வாங்கிவிட்டார்கள் என்றும் அதன் தன்மைக்கேற்பவும், சம்பந்தப்பட்டவர்களின் தகுதிக்கேற்பவும் சாடப்படுவார்கள். இதை நாம் ஓரளவு தெரிந்து தான் வைத்திருக்கிறோம்.

இப்படி விமர்சனங்களுக்கு உள்ளாபவர்களை விதவிதமான வார்த்தைகளைக் கொண்டு விமர்சிக்கத் தயங்காத சமுதாயம், ஒருவன் ஓடிவிட்டான் அல்லது அவர்கள் ஓடிவிட்டார்கள் என்ற சொற்றொடரை மாத்திரம் சட்டென எடுத்து விட்டுவிடாமல், மிகக் கவனமாகவே கையாளுகிறது. இதை ஒரு கடுமையான விமர்சனமெனக் கருதி,

எல்லா சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தாமல், எக்கச்சக்கமான சூழ்நிலை நேரிடும் போது மாத்திரம் சங்கடத்தோடும், கோபத்தோடும் பயன் படுத்துகிறது. அதாவது, ஒருவன் செய்யத்தகாத செயலைச் செய்யும் போது, வேறு வழியின்றி பயன்படுத்துகிறது. உதாரணமாக, ஓர் அசிங்க மான செயலைச் செய்ததினிமித்தம் தாக்குப்பிடிக்க முடியாமல் இடம் விட்டு வெளியேறுபவனை, "ஊரை விட்டு ஓடிவிட்டான்" என்று சொல்லுகிறது. இன்னும், ஒருவன் ஒழுக்கமாக இருந்து, முறை யாகப் பெண் கேட்டு, முழுச் சம்மதத்தோடு ஊரறிய ஒரு பெண்ணைக் கரம் பிடிக்காமல், இரண்டு பேருமாகக் கிளம்பிவிட்டால், "அவர்கள் ஓடி விட்டார்கள்" என்று கோபம் கொப்பளிக்கச் சொல்லும். மொத்தத் தில், "ஒருவன் ஓடிவிட்டான்" அல்லது "அவர்கள் ஓடிப்போனார்கள்" என்பது நல்ல ஒரு சூழ்நிலைக்காகவோ அல்லது சரியான ஒரு செயலுக்காகவோ பயன்படுத்தப்படுவது இல்லை.

சரி, இப்படி சமுதாயத்தால், காரணகாரியத்தோடு கவனமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ஓடிப்போனார்கள் என்ற சொற்றொடரை, "...அப்பொழுது, சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார் கள்" (மத். 26:56) என்று இயேசுவின் சீடர்களுடைய செயலுக்காக ஆவியானவர் பயன்படுத்தியிருப்பது, இவர்களின் செயலை நாம் இலேசாக எடுத்துக் கொள்ளக்கூடாதென்பதையே காட்டுகிறது. இந்த இடத்தில் சீடர்கள் செய்தது முற்றிலும் தவறாக இருந்தபடியால் தான், ஆவியானவரின் சுடு சொல்லுக்கு இவர்கள் இலக்காயிருக்கிறார்கள். எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் இயேசுவை விட்டுப் போயிருந் திருக்கவே கூடாது என்பது தான் ஆவியானவரின் வாதமாக உள்ளது. "வேத வாக்கியம் நிறைவேற வேண்டியது அவசியமாயிருக்கிறதே" என்று உங்களில் சிலர் இங்கே முணுமுணுப்பது என் காதில் விழுகிறது. ஏன், அது ஆவியானவருக்குத் தெரியாதா? சரி, உங்கள் எண்ணப்படி யே பார்த்தாலும், வேதவாக்கியம் நிறைவேறட்டுமென்றா சீடர்கள் ஓடினார்கள்? இல்லை, இல்லை, இல்லை.

ஒருவேளை, இயேசுவின் சீடர்களுக்கு வக்காலத்து வாங்க நீங்கள் நினைத்தால், இங்கே சற்று கவனியுங்கள். யோவான்ஸ்நானகன் என்ற பயமறியா பக்திமானை நாம் அறிவோம். இயேசுவுக்கு முன்னோடியாகவும், அவருக்கு "வழியை ஆயத்தப்படுத்தவும்" வந்து, சபையாகிய பரலோக ராஜ்யம் (மத். 16:18,19) சமீபித்திருக்கிற தென்று கூவி கூவிப் பிரசங்கம் செய்தார். அவருக்கும் சீடர்கள் இருந் தார்கள் (யோவா 1:35). ஆனால், அந்தச் சீடர்களின் செயல்பாட்டுக்கு அருகில் நிற்கக் கூட நாங்கள் அருகதை அற்றவர்கள் என்பதை இயேசு வின் சீடர்கள் தங்கள் செயலால் நிரூபித்திருப்பது உங்களுக்குத் தெரியு மா? எப்படியெனில், அந்நாட்களில் ஆட்சிக் கட்டிலிருந்த ஏரோது வின் விபச்சார குற்றத்தை முகமுகமாய்க் கண்டித்ததினிமித்தம் சிறை யில், அடைக்கப்பட்டான் யோவான் (மத் 4:12, மத் 14:3). அதாவது, அவனைக் கைது செய்து, பிறகு காவலில் வைத்தார்கள். பிறகு,

எந்த ஒரு விசாரணையும் இல்லாமல், ஓர் அரக்கியின் சதியால் (மத் 14:6-10) சிரச்சேதம் பண்ணப்பட்டான். ஆனாலும், அவனு டைய சீடர்கள் ஓடிப்போனார்களென்று வேதம் கூறுவதில்லை. ஆம், யோவான் காரணமின்றிக் கைது செய்யப் பட்டான், சீடர்கள் ஓட வில்லை. யோவான் அநியாயமாய்க் காவலில் வைக்கப்பட்டான், சீடர்கள் ஓடவில்லை. சதி செய்து கொலை செய்யப்பட்டான், அப்பொழுதும் சீடர்கள் ஓடவில்லை. இத்தனைக்கும் யோவான், தான் உயிரோடெழுந்திருப்பேன் என்றெல்லாம் எதுவும் பிரசங்கிக்க வில்லை.

இப்படி இவர்கள் ஓடிப்போகாதது மாத்திரமல்ல, யோவான் மரித்து, மரித்த இடத்தில், புல்லும், செடியும், மரமும் உண்டான பிறகும், யோவனுக்காக வாழ்ந்திருக்கிறார்கள்! அதெப்படி என்கிறீர் களா? நியாயமான கேள்விதான். ஆனால், கவனியுங்கள். பெந்தெ கொஸ்தே நாளில் சபை ஆரம்பிக்கப்பட்டு, பல ஆண்டுகள் கழித்துத் தான் பவுலடியார் மனம் மாறினார் (அப். 9அதி). அதன்பிறகு அவர், மூன்று நற்செய்திப் பயணங்கள் மேற்கொண்டார் (அப். 13-14அதி; 15:39-18:22;18:23-21:16) அப்படி மேற்கொண்ட மூன்றாவது பயணத்தின் போது, எபேசு பட்டணத்துக்கு வந்தார் (அப் 19:1). அங்கே வந்த போது, சிலர், தாங்கள் யோவான் கொடுத்த ஞானஸ் நானம் பெற்றோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இவர்களின் இந்தக் கூற்றிலிருந்து நமக்கு இரண்டு காரியங்கள் தெரிகிறது. ஒன்று, இவர்கள் யோவானாலே ஞானஸ்நானம் பெற்று இன்னும் அதில் உறுதியாக இருந்துள்ளார்கள் அல்லது யோவானின் சீடர்கள் தொடர்ந்து ஞானஸ்நானம் கொடுத்து வந்துள்ளார்கள். இதில் எது உண்மையாக இருந்தாலும், யோவானைப் பின்பற்றியவர்களின் உள்ள உறுதி நம்மை வியக்க வைக்கிறது!.

ஆனால், இயேசுவின் சீடர்கள்? ஓடிவிட்டார்கள்! அதுவும் எல்லாரும் ஓடிவிட்டார்கள்!! எப்பொழுது? அவர் கைது செய்யப் பட்ட போது. (மத் 26:54,56) அவரை இன்னும் காவலில் வைக்கவு மில்லை. சிலுவையில் அறையவுமில்லை. அந்நாளில் ஓடிப்போன சீடர்களுக்கு, அவர் கைது செய்யப்பட்டதே போதுமானதாக இருந்துள்ளது. எங்கே போய் முட்டிக் கொள்வதென்று தெரியவில்லை.

பேர் சொல்லி தன்னாலே அழைக்கப்பட்டு, ஏற்ற இறக்கங்களில் அரவணைக்கப்பட்டு, எல்லாவற்றாலும் போதிக்கப்பட்டு, ஆவியி லும், சரீரத்திலும் போஷிக்கப்பட்ட இவர்களில் ஒருவர் கூட நில்லா மல், ஒட்டு மொத்தமாக ஓடிப்போனது இயேசு ஆண்டவருக்கு எப்படி யிருந்திருக்குமென்று எண்ணிப்பாருங்கள்! நினைத்தாலே குலை எல்லாம் நடுங்குகிறது, நெஞ்சமெல்லாம் பதறுகிறது. எப்படித்தான் இயேசு ஆண்டவர் பொறுத்துக் கொண்டாரோ?! நூறு பேர் உள்ள சபையில், ஒரு பத்துப்பேர் கலைந்தோ, தொலைந்தோ போனாலே, நித்திரைக்கு விடுமுறையாகி விடுகிறது. இத்தனைக்கும் அவர்களுக்கு

பிரசங்கிப்பதைத் தவிர வேறு எதுவும் பெரிதாகச் செய்திருக்கமாட்டோம். ஒரு பத்து சதவீதத்திற்கே இப்படியென்றால், நூறு சதவீதமும் அம்பேலா னால், அதாவது 12 பேரைத் தெரிந்தெடுத்து வளர்த்து, அந்தப் 12-ம் போய்விட்டால்?! ஆனால், அதையும் என் இயேசு பொறுத்துக் கொண்டார். ஆம், அவர் தான் நம் இயேசு. ஆம், அவரே தான். அவருக்கு ஈடுஇணை அவர் தான்.

இதிலே வேடிக்கை என்னவென்றால், இவர்கள் இப்படி ஓடிப் போவார்கள் என்பது இயேசுவுக்கு முன்னமே தெரிந்திருந்தது. பழைய ஏற்பாட்டு வசனங்களில் அத்துபடியாக இருந்த இயேசுவானவர், தீர்க்க தரிசனங்களில் "எவரெஸ்ட்" என்ற பெருமைக்குரிய ஏசாயா 53-ம் அதிகாரத்தை நன்றாக அறிந்திருப்பார். அதில், "..அவரை விட்டு நம்மு டைய முகங்களை மறைத்துக் கொண்டோம்" (ஏசா 53:3) என்றுள்ளது. அந்தத் தீர்க்கதரிசனம் தான் அந்நாளிலே நிறைவேறிற்று.

சரி, இயேசுவின் சீடர்கள் ஓடிப்போனார்கள், ஓடிப்போனார்கள் என்றே நாம் பேசி நேரத்தைக் கழிக்காமல், அவர்கள் ஓடிப்போன தற்கான காரணங்கள் என்ன என்று கண்டுபிடித்து, அதிலிருந்து நமக்கு என்ன பாடங்கள் கிடைக்கிறதென்று தெரிந்து கொள்ள முயற்சிப் போம்.

## I. தவறான எதிர்பார்ப்பால் ஓடிப்போனார்கள்

ஆண்டவர் இயேசுவைப் பின்பற்றுவதிலிருந்து, சீடர்கள் ஓடிப் போனதற்கான முதலாவது காரணமாக இயேசுவிடம் அவர்களுக் கிருந்த தவறான எதிர்பார்ப்பைக் கூறலாம்.

எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே (மத் 19:27) என்று சொன்ன சீடர்களை எப்படி இப்படிக் குற்றம் சாட்டலாம் என்று நீங்கள் நினைப்பது எனக்கு விளங்காமலில்லை. நானும் இங்கே இயேசுவின் சீடர்களுக்கு ஆவியின் சிந்தையே இருக்க வில்லை என்று சொல்ல முற்படவில்லை. சீடர்களுக்கு ஆவியின் சிந்தை இருக்கவே செய்தது. எப்படியெனில், ஒரு சமயம் இயேசுவைப் பின்பற்றி வந்த திரளான கூட்டம், "...இது கடினமான உபதேசம் யார் இதைக் கேட்பார் கள் என்று சொன்னதோடு" (யோவா 6:6) "அவருடனே கூட நடவாமல், பின்வாங்கியும் போனது" (6:66). அப்பொழுது இயேசு எஞ்சியிருந்த 12 பேரையும் பார்த்து, "நீங்களும் போய்விட மனதா யிருக்கிறீர்களோ" என்று கேட்டார் (யோவா 6:67). அதற்கு அவர்கள், "...யாரிடத்தில் போவோம் நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்றார்கள் (யோவா 6:68). ஆகவே, எவ்வித சந்தேகமு மில்லாமல் சீடர்களுக்கு ஆவியின் சிந்தை இருக்கவே செய்தது.

ஆனால், ஆவியின் சிந்தையினூடே அவர்களுக்கு மாம்ச சிந்தையும் இருந்துள்ளதென்பதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது. இன்றைக்கு எப்படி அநேகர் இயேசு பூமிக்குரிய ராஜ்யத்தை மீண்டும் ஏற்படுத்துவார் என்று எந்தவொரு முகாந்திரமுமில்லாமல், வசனங்

களின் உபதேசத்திற்கு மாறாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ அதுபோல, இயேசுவின் போதனைகளுக்கு எதிராக, பூமிக்குரிய ராஜ்யம் பற்றிய சிந்தை அவர்களுக்குள்ளாக இருந்து கொண்டே இருந்தது. இயேசுவின் ஊழிய நாட்களில் ஒரு சமயம், செபதேயுவின் குமாரர்களும், இயேசுவுக்கு நெருக்கமாக இருந்தவர்களுமென்று நம்மால் அறியப்பட்டிருக்கிறவர்களுமாகிய யாக்கோபும், யோவானும், உமது மகிமையிலே, எங்களில் ஒருவன் உமது வலது பக்கத்திலும், ஒருவன் உமது இடது பக்கத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எங்களுக்கு அருள் செய்ய வேண்டும் என்றார்கள் (மாற் 10:35-37). இவர்களின் இந்தக் கண்ணோட்டம் தவறு என்பதைத் தொடர்ந்து வந்த வசனங்களில் இயேசு சுட்டிக்காட்டினார்.

சீடர்களின் இந்த பூமிக்குரிய சிந்தையும், அதைத் தொட்டு வந்த தவறான நினைப்பும், அவர் உயிரோடெழுந்த பிறகும் தொடர்ந்திருக்கிறதென்பதை நாம் கவனித்தால், அவர்கள் எந்தளவு அச்சிந்தையால் அலைக்கழிக்கப்பட்டிருந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளமுடியும். ஆம், அவர் உயிரோடே எழுந்து 40 நாட்களுக்கு அவர்களோடே சஞ்சரித்து, பரலோகத்திற்கு ஏறிப்போகும் நாளும், அந்த நேரமும் வந்த போது கூட, ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்? என்று கேட்டுள்ளார்கள் (அப் 1:6). பூமிக்குரிய ராஜ்யத்தின் சிந்தை அவர்களை எந்தளவு பாதித்திருந்ததென்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. ஆக, சீடர்கள் ஓடிப்போனதற்கான காரணங்களில் கண்டிப்பாக நாம் இதைக் கூறமுடியும்.

இதை வாசிக்கும் அருமையானவர்களே, இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிற நமக்குள்ளே எப்படிப்பட்ட சிந்தை இருக்கிறது? இயேசு வலியுறுத்தும் பரத்துக்கடுத்த ஆன்மீக சிந்தை இருக்கிறதா அல்லது அந்நாட்களில் சீடர்கள் கொண்டிருந்த, மாம்சீக சிந்தையோடு இரண்டறக் கலந்திருந்த ஆன்மீக சிந்தை இருக்கிறதா? சொல்லுங்கள். இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்களாகத்தானே நாம் உள்ளோம்! ஆமாம், அப்படித்தான் என்று ஒத்துக் கொள்ளுங்கள், தயக்கம் என்ன வேண்டி கிடக்கிறது. இயேசு ஆண்டவரின் வல்லமையான போதகங்களை காதாரக் கேட்டும், அவருடைய உண்மையான அற்புதங்களை கண்ணாரக் கண்டுமிருந்த சீடர்களையே தவறான எதிர்பார்ப்புடன் கூடிய மாம்ச சிந்தை, இயேசுவை விட்டு ஓட வைத்திருக்கிறதென்றால், உங்களையும், என்னையும் விட்டு வைக்குமா? கண்டிப்பாக விட்டு வைக்காது.

ஆனால், பாவங்களை இரட்சிக்கும்படியாக வந்து (லூக் 19:10) பரத்துக்கடுத்த காரியங்களைப் போதித்த இயேசுவானவர் இன்றைக்கு உலகத்தில் எப்படியாகக் காட்டப்படுகிறார்? மாம்சப் பிரகாரமான, பூமிக்குரிய அனைத்துத் தேவைகளும் அவரண்டை வந்தால் சந்திக்கப்படும் என்று தானே காட்டப்படுகிறார்! இப்படிக் காட்டப்படுவது, அவரைப் பின்பற்றுகிறவர்கள் இறுதிவரை அவரை பின்பற்ற

வேண்டுமென்பதற்காகவா அல்லது எதிர்பார்ப்பு நிறைவேறாத போது பாதியிலே விட்டு ஓடிப் போகட்டும் என்பதற்காகவா? உலகிற்கு இயேசுவானவர் வந்ததின் உன்னத நோக்கத்தை மறைத்து, அவரண்டை வந்தால் மாம்ச தேவைகளாகிய வியாதி, பேய், பிசாசு, வேலையின்மை, கடன் தொல்லை, வியாபார நலிவு, குடும்பப் பிரச்சினை ஆகிய இவைகள் எல்லாம் நீங்கும் என்று காட்டுவது சாத்தானின் சதி வேலையாக அல்லவா தெரிகிறது? ஜனங்கள் பாதியிலே ஓடிப் போகட்டும் என்ற சூழ்ச்சி உள்ளிருப்பது போல் தெரியவில்லையா? ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

ஆம், பூமிக்குண்டான தேவைகளுக்காக இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள், ஏதாவது ஒரு கட்டத்தில் ஓடித்தான் போவார்கள். ஆகவே, நாம் அப்படியாக இல்லாமல், பக்தன் யோபு போல், அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்றும் (யோபு 17:15). பவுலடியார் போல், கிறிஸ்து எனக்கு, ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் (பிலி. 1:21) என்றும் பின்பற்றுகிறவர்களாக இருப்போமாக!.

## II. சொல்லும், செயலும் வேறாக இருந்ததால் ஓடிப்போனார்கள்:

ஆண்டவர் இயேசுவைப் பின்பற்றுவதிலிருந்து, சீடர்கள் ஓடிப்போனதற்கான இரண்டாவது காரணமாக, சீடர்களின் சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தம் இல்லாமலிருந்ததை நாம் கூறலாம்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசுவைப் பற்றி வேதாகமம் கூறும் சிறப்புகளுள் ஒன்று, அவர், செய்யவும், உபதேசிக்கவும் தொடங்கினார் என்பது (அப். 1:3) எப்படி அவருடைய செயலுக்கும், உபதேசத்திற்கும் சம்பந்தம் இருந்ததோ அதைப் போலவே, அவருடைய சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தமிருந்தது. ஆனால், இயேசுவின் சீடர்களின் சொல்லும், செயலும் வெவ்வேறாக இருந்தது.

ஆம், இயேசுவின் சீடர்கள் ஓடிப்போவதற்கு முன்பு எப்படியெல்லாம் பேசினார்கள் என்று கொஞ்சம் கவனியுங்கள். சீடர்களோடு நடந்த உரையாடலின் ஒரு கட்டத்தில், உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மத். 26:21) ஆனால், அவர்களோ, தங்களில் யாருமே அந்தத் தவறைச் செய்ய மாட்டாதது போல, “நானோ, நானோ” என்று ஒவ்வொருவராய்க் கேட்கத் தொடங்கினார்கள். பிறகு, ஓர் ஐந்து வசனங்கள் தள்ளி. இந்த இராத்திரியிலே, நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள் என்றார் (26:31). இயேசு நடப்பதைத் தான் சொல்லுகிறார் என்று எண்ணிப் பேசாமல் இருக்க வேண்டியது தானே. ஆனால், இருக்கவில்லை. சிலுவைக்கு முன்னால், பெரும்பாலும் வாய்ச்சொல் வீரராக இருந்த பேதுரு, “.... உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்” என்றதோடு (26:3), இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று இயேசு சொன்னதற்கு, “நான் உம்மோடே மரிக்க வேண்டியிருந்தாலும் உம்மை மறுதலிக்க

மாட்டேன்" என்றான் (26:35). இவனோடு சேர்ந்து, சீஷர்கள் எல்லாரும் அப்படியே சொல்லிவிட்டார்கள் (26:36). இவர்கள் பேச்சைப் பார்த்தால் மெய் சிலிர்க்கிறது. இயேசு ஆண்டவருக்கு இப்படிப்பட்ட சீடர்கள் கிடைத்ததற்கு அவர் மாபெரும் பாக்கியம் பெற்றிருக்க வேண்டுமென்று கூட எண்ணத் தோன்றுகிறது.

ஆனால், நடந்தது என்ன ? அவர்களுடைய சீஷத்துவத்துக்கான சவால் வந்தபோது, பின்னங்கால் பிடரியில் அடிக்க ஓடிப்போனார் கள். இவர்களையொத்த வாலிபன் ஒருவனை, மாற்கு ஆசிரியர் நமக்கு அடையாளம் காட்டுகிறார். (மாற் 10:17-22). இவன், இயேசு சென்ற வழியில் ஓடிவந்து, நடுரோட்டில் முழங்காலிடுகிறான். இயேசுவை நல்ல போதகரே என்று வாய் நிறைய அழைத்தான். நித்திய ஜீவனை சுதந்தரிக்க நான் என்ன செய்ய வேண்டும் என்றான் (வ17). மோசேயின் பிரமாணங்களை என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக் கிறேன் என்றும் சொன்னான் (வச21). இவன் வந்த வேகத்தையும், இவன் பேசின பேச்சையும் பார்த்தால், உலகத்தில் பிறந்த ஒவ்வொரு வனும் இவனைப் போல்லலவா இருக்க வேண்டுமென்பது போல் தெரிகிறது! ஆனால், வசனம் 22க்கு வரும் போது, இவன் உலக ஆஸ்தியை விட மனமற்றவனாய் துக்கத்தோடே போய்விட்டான் என்று பார்க்கிறோம்.

அன்பானவர்களே, நாம் எல்லோரும் கிட்டத்தட்ட சிலுவைக்கு முன்னான சீடர்கள் போலும், இந்த பணக்கார வாலிபன் போலும் தானே இருக்கிறோம்? தேவனுக்கடுத்த காரியத்திலும், கிறிஸ்துவின் உபதேச காரியத்திலும், கிறிஸ்து கட்டின ஒன்றான மெய்ச்சபை பற்றிய காரியங்களிலும் வெறும் பேச்சுத்தானே உள்ளது? நம்முடைய சீஷத்து வத்துக்கான விலை கொடுக்க வேண்டிய நேரம் வரும்போது நம்மில் எத்தனை பேர் அதற்குத் தயாராக இருக்கிறோம்? சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தமில்லாத ஒரு நிலைதானே காணப்படுகிறது.

வெறுமனே இயேசுவின் அன்பைப் பற்றி பேசுகிறோம். ஆனால், ஒரு மிருகத்தைப் போன்று கடிக்கிறோம். இயேசுவின் இரக்கம் பற்றிப் பேசுகிறோம், ஆனால் ஒரு டம்ளர் தண்ணீர் கொடுக்க யோசிக்கி றோம். இயேசுவின் சாந்தம் பற்றிப் பேசுகிறோம். ஆனால், பொறுமை யில்லாமல் காரியங்களைக் கெடுக்கிறோம். இயேசுவின் தியாகம் பற்றி முழங்குகிறோம். ஆனால், காணிக்கை கொடுப்பதற்குக் கூட கையைக் குறுக்குகிறோம். இயேசுவின் பாடுகள் குறித்துத் தியானிக் கிறோம். ஆனால், ஒரு சின்ன சோதனை வந்தால் கூடப் பின்வாங்குகி றோம். இயேசு சபையைக் கட்டினார் என்று ஏற்றுக்கொள்ளுகிறோம். ஆனால், சபை ஒன்றுதான் என்றால் முகம் சுளிக்கிறோம். ஆராதனை யில் பாடல் வேண்டும் என்கிறோம் ஆனால், இசைக்கருவிகள் புதிய ஏற்பாட்டில் இல்லையே என்றால் முக நாடியை மாற்றுகிறோம். கர்த்தரின் பந்தியை இயேசு ஆரம்பித்தார் என்று விசுவாசிக்கிறோம். ஆனால், அது வாரம் தோறும் என்றால், அப்படியொன்றும் அவசிய மில்லை என்று வாதிடுகிறோம். புதிய ஏற்பாட்டில் பண்டிகைகள் பற்றி இயேசு ஒன்றும் உபதேசிக்கவோ, ஆதிக்கிறிஸ்தவர்கள் கொண்டாடிய

தாகவோ இல்லை என்றால் ஆம் என்கிறோம், ஆனால், அந்நாளில் ஆடிப்பாடி மகிழந்திட அதிகாலமே எழுகிறோம். இதெல்லாம் சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தமுடைய நிலையா?. வாயைத் திறங்களேன்!

சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தமில்லாமல் நடந்து கொண்ட சீடர்களுக்கு என்ன நேர்ந்தது என்று கண்டோம். ஆகையால், நாமும் நம்முடைய வாழக்கையில் சத்தியத்தின்படி செய்ய முற்பட வில்லையானால் இயேசுவை விட்டு விலகும்படியான நிலை வந்தே தீரும். நாம் கவனமாயிருப்பது அவசியம்.

## III. சரியான ஆயத்தமில்லாததால் ஓடிப்போனார்கள்

ஆண்டவர் இயேசுவைப் பின்பற்றுவதிலிருந்து சீடர்கள் ஓடிப் போனதற்கான இன்னுமொரு காரணமாக, சீடர்களின் ஆயத்தமின்மை யை நாம் கூறலாம்.

தன்னுடைய காரியமாக மனிதன் செயல்பட அவனுக்கு ஆயத்தம் அவசியம் என்பதைத் தேவன் ஆதி முதலே வலியுறுத்தி வந்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களுக்கு பத்துக்கட்டளைகளில் ஒன்றாக, ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக (யாத் 20:8) என்று சொன்ன தேவன், ஓய்வு நாளுக்கு முந்தின நாளை ஆயத்த நாளாகக் கடைப்பிடிக்கும்படியாகக் கூறியுள்ளார் என்றே தெரிகிறது. (மாற் 15:42, லூக் 23:54). அதாவது, சில மணி நேரம் அவரைத் தொழுவதற்குக் கூட, மனிதன் தன்னை ஆயத்தமாக்கிக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். இப்படி சில மணி நேரம் தேவனோடு உறவாடுவதற்கே ஆயத்தம் அவசியம் என்பது தேவ திட்ட மாகவும், தேவ எதிர்பார்ப்பாகவும் இருக்குமானால், இயேசுவைப் பின்பற்றி, அதன் பலனாக மறுமையைச் சுதந்தரித்து, அவரோடு கூட என்றென்றும் வாழும் பாக்கியம் பெற சீடர்களுக்கு எவ்வளவு ஆயத்தம் இருந்திருக்க வேண்டுமென்பதை எண்ணிப்பாருங்கள்.

இந்தப் பன்னிரெண்டு சீடர்களுக்கும், அந்நாட்களில் ஏராளமாய் அவரைப் பின்பற்றின சீடர்களுக்கும், ஆயத்தம் முக்கியம் என்பதை உணர்த்தவே 10 கன்னிகைகள் உவமையைச் சொன்னார். அதன் மூலம், ஆயத்தத்திற்கும், ஆயத்தமின்மைக்கும் மிகப்பெரிய வேறு பாடுண்டு என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டினார். ஆயத்தமா யிருந்த புத்தியுள்ளவர்கள் தான் மணவாளனோடே, கல்யாண வீட்டுக்குள் பிரவேசித்துள்ளார்கள் (மத். 25:10). மற்றவர்கள், ஓடிப் போகவில்லை, அதைவிட மோசமாக விரட்டப்பட்டிருக்கிறார்கள்.

நம்முடைய இரட்சகர், தான் காட்டிக்கொடுக்கப்படும் நாளுக் காகவும், அதைத் தொடர்ந்து நடக்கப்போகும் சவாலான காரியங் களுக்காகவும் சீடர்களை ஆயத்தப்படுத்தியே உள்ளார். வழக்கம் போல, தன் பங்கில் அவர் குறை ஏதும் வைக்கவில்லை. ஆம், மத் 16:21-ல் "அது முதல் இயேசு தாம் எருசலேமுக்குப் போய் மூப்ப ராலும், பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பலபாடுகள் பட்டு, கொலையுண்டு மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீடர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்". அத்தோடு, மத்

26:31ல், "....இயேசு அவர்களை நோக்கி, மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்" என்றார். ஆனாலும், சீடர்கள் எதிர் வரும் சூழ்நிலைக்கு ஆயத்தமாகவில்லை. கண்டிப்பாக, இது இயேசு ஆண்டவரின் தவறு அல்ல.

ஒருவேளை இவர்கள் இயேசுவின் வார்த்தைகளை அலட்சியப் படுத்தாமல், தங்களை எல்லா வகையிலும் ஆயத்தப்படுத்தியிருந்தால் ஓடிப்போக வேண்டிய நிலை வந்திருக்காது. சிலுவைக்குப் பின்னால், கிறிஸ்துவின் காரியமாக "ஓகோ" என்று வாழ்ந்த இவர்களை நாம் இப்படி குறைத்துப் பேச வேண்டிய நிர்பந்தமும் ஏற்பட்டிருக்காது.

இயேசு ஆண்டவரையும், அவருடைய உபதேசத்தையும், ஏற்று நடக்க விரும்பும் நாம் நம்முடைய பக்தி வாழ்க்கையில் ஆயத்தமாயிருக்க வேண்டியது மிகவும் அவசியம். "இதோ சீக்கிரமாய் வருகிறேன்" என்று இயேசு சொல்லிச் சென்றிருக்கிறார். புதிய ஏற்பாட்டின் கடைசி நூலாகிய வெளிப்படுத்தலின் கடைசி அதிகாரத் தில் மட்டும் "இதோ நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்றும், "மெய்யாகவே, நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்றும் மூன்று முறை சொல்லப்பட்டிருக்கிறது (வெளி 22:7,12,20). ஆனால், அந்த நாள் எப்பொழுது என்று தெரியாது. மத். 24:36-ல் இயேசுவானவர், அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள் என்று கூறிவிட்டார். அப்படியானால், இயேசுவைப் பின்பற்றும் அவருடைய சீஷன் என்ன செய்ய வேண்டும்? ஆயத்தத்தோடு காத்திருக்க வேண்டும் அவ்வளவு தான். பவுலடியார் கொரிந்தியர்களுக்கு எழுதும் போது, அப்படியே நீங்களும் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுத்துவதற்குக் காத்திருக்கிறீர்கள் என்கிறார் (1கொரி. 1:7). இன்னும், அதே பவுலடியார், பிலிப்பியருக்கு எழுதும் போது, ...இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்கிறார் (பிலி 3:20).

ஆக, வாக்குமாறாத இயேசு கிறிஸ்து மீண்டும் வருவது நிச்சயம். ஆகையால், அவரது வருகைக்காக, இயேசுவின் வார்த்தைகளடங்கிய புதிய ஏற்பாட்டை அலட்சியம் செய்யாமல், அவருடைய உபதேசங்களின் உள்ளான பொருளை அறிந்து, அவைகளினடிப்படையில் நாம் நம்மை ஆயத்தமாக்க வேண்டும். சிலுவைக்கு முன்னான சீடர்கள் போல், இயேசு கொடுக்கும் எச்சரிப்பின் வார்த்தைகளை நாம் அலட்சியம் செய்வோமானால், அந்நாளில், நாம் அவருடைய சமூகத்தை விட்டு வெட்கத்தோடே ஓடிப்போவோம் அல்லது, "...அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று விரட்டப்படுவோம்" (மத். 7:23)

அருமையானவர்களே, இந்த நிலை நம்மில் யாருக்கும் வராமல், நம்மை கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தால் காத்துக் கொள்ள பரலோகத்தின் தேவன் நமக்கு இரக்கம் கட்டளையிடுவாராக! ஆமென்.

**S. ராஜநாயகம்**

# தேவனுடைய வேலையை ஒருமித்து செய்வதெப்படி?

வேதாகமம் ஒற்றுமையைக் குறித்தும், கிறிஸ்துவுக்குள் நாம் ஒன்றாய் இருக்கவேண்டும் என்பதைக் குறித்தும் போதிக்கிறது என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ளவேண்டுமென்பதே என் ஆசை.

கிறிஸ்து ஒரே சபையைக் கட்டினார். அந்த சபையை வளர்க்கும் படி நம்மிடத்தில் எதிர்பார்கிறார். யோவான். 17:20-23 வசனங்களில், அப்போஸ்தலர்களுக்காகவும், அவர்களால் மன மாற்றம் அடையப் போகிறவர்களுக்காகவும் மற்றும் அப்போஸ்தலர்களுக்குப் பின் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியப் போகிறவர்களுக்காகவும் இயேசு ஜெபித்தார். நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்கிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்கு தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப் பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன் என்றார்.

கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்படிந்து, ஒற்றுமையாய் இருக்கிற தேவ ஜனங்களைக் காட்டிலும் அருமையானது வேறொன்றுமில்லை. அதாவது இரட்சிக்கப்பட்டு, ஒரே சபையில் அங்கத்தினராயிருந்து, கர்த்தருடைய நாமத்தைத் தரித்துக் கொண்டு, கர்த்தருக்காய் ஒருமித்து வேலை செய்து, அவரைத் தொழுது கொண்டு, அவருக்கு உண்மையாய் இருக்க வேண்டுமென்பதே அக்காரியம். கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதுகையில், சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தை பேசவும், பிரிவினை களில்லாமல் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். (1. கொரி 1:10) தாவீது இதைக் குறித்து நீண்ட நாட்களுக்கு முன்பே கூறுகையில், இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது, எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது. (சங். 133:1) என்றான். ஒற்றுமையாய் இருப்பது

மிகுந்த அருமையானதாயிருக்கிறது. ஆனால் பிரிவினையோ அசிங்கமும், அழிவுமானதாயிருக்கிறது. கிறிஸ்து கூறுகையில், இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி, தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந் திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலை நிற்கமாட்டாது. (மத் 12:25) என்று விளம்புகிறார். பவுல் கொரிந்து சபையிலிருந்த பிரிவினையைக் கண்டனம் பண்ணும் போது அதன் அங்கத்தினர்களைப் பார்த்து, கிறிஸ்து பிரிந்திருக் கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என்று கேட்கிறார். (1 கொரி. 1:13) ஒவ்வொரு கேள்விக்கும் இல்லை என்பதுதான் பதில் என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் பவுல் இங்கு சொல்ல விரும்புவதெல்லாம் நாம் மனுஷரைப் பின்பற்றா மல், கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் என்பதே. ரோமாபுரி யிலுள்ள பரிசுத்தவான்களுக்கு பவுல் எழுதும்போது அன்றியும் சகோதரரே நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயி ருங்கள். அவர்களை விட்டு விலகவேண்டு மென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ் செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிற வர்களாயிருக்கிறார்கள். (ரோமர். 16:17,18) என்று கூறுகிறார்.

ஒரு பிராந்திய சபையில் சில வேளைகளில் சகோதரர்கள் ஒருவரோடொருவர் ஒத்துப்போவதில்லை. ஒருவேளை இப்பிரச்ச னை உபதேசக் கேட்பாடுகளால் எழுவதாக இருக்கலாம். ஆனால், பெரும்பாலும் ஒரு தனி நபரைக் குறித்தோ, அல்லது சிறு, சிறு காரியங்களைக் குறித்தோ, அல்லது பொறாமையினாலோ, பகைமை யினாலோ வருகிறது. சிலசமயங்களில் யார் பிரசங்கிக்க வேண்டு மென்பதிலும், யார் அநேகருடைய கவனத்தை ஈர்க்கிறார்கள் என்பதி லும் மேலும் இதைப் போன்ற காரியங்களில் பிரச்சனை எழும்பு கிறது. இது கவலைக்குரியதாயிருக்கிறது. சபையின் அலுவல் களைத் தடுப்பதற்கு இது ஒரு காரணமாகவும் மற்றும் சபையின் அங்கத்தின ரல்லாதவர்கள் அங்கத்தினர்களுக்குள்ளே இப்பிரச்சனை யைக் காணும் போது சபைக்கு மரியாதைக் குறைவை ஏற்படுத்துகிறதாக வும் இருக்கிறது. அங்கத்தினர்களிடையே பிரிவினை இருக்கும் போது மக்களைச் சந்திப்பது முடியாத காரியமாய்ப் போகிறது. நாம் தேவனை நேசிக்கவும் ஒருவரை ஒருவர் நேசிக்கவும், ஒருவருக் கொருவர் அன்பு பாராட்டவும், உதவவும் அங்கத்தினர்களுக் கெல்லாம் ஜெபிக்கவும் வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

சில நேரங்களில், ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் கிறிஸ்து வின் சபைகள் ஒன்றோடொன்று ஒத்துப்போவதில்லை. அவர்கள் கூட்டா

கச் சேர்ந்து ஒரு மனதாய் ஊழியம் செய்வதும் இல்லை. சுவிசேஷக் கூட்டங்களாலும் சரி, அல்லது மற்ற நற்காரியங்களாலும் சரி ஒருவருக்கொருவர் உதவியாயிருப்பதுமில்லை. பிரசங்கியார்கள் இக்காரியங்களில் சிலவேளை மோசமாக செயல்படுவதுமுண்டு. அவர்கள் ஒருவரோடொருவர் போட்டி போடுவதைப் போன்று இது அமைகிறது. இது தீமையும், தவறானதுமாகும். இப்படிப்பட்ட பிரச்சனைகள் நிறைந்திருக்கும் போது சபையானது எப்படித்தான் வளரும்? மாறாக, இப்பகுதியிலுள்ள சபைகளும் மற்றும் பிரசங்கி யார்களும் ஒருவரோடொருவர் ஐக்கியம் கொண்டு, ஒருவருக் கொருவர் உதவி செய்து, மற்றவர்களுடைய சுவிசேஷக் கூட்டங் களில் கலந்துகொண்டு, தங்களால் இயன்ற உதவியை செய்ய வேண்டுமென்றே தேவன் அவர்களிடத்தில் எதிர்பார்க்கிறார். ஒரு பிராந்திய சபை மற்றொரு பிராந்திய சபை என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாதென்றும் கட்டளையிட அதிகாரமில்லை என்பது உண்மைதான். ஆனால், மற்ற பிராந்திய சபையினுடைய சுதந்திரத் தை ஒரு பிராந்திய சபை புரிந்து கொள்ளும் வரை இரண்டு பிராந்திய சபைகளும் ஒருமித்து பணிபுரிவதே சரியானதாகவும், ஒழுங்கானதா கவும் இருக்கும். இக்காரியம் புதிய ஏற்பாட்டில் போதிக்கப்படுகிறது.

ஒரு தனிப்பட்ட அங்கத்தினரிடமோ, அல்லது மற்ற பிராந்திய சபையிடமோ, கருத்து வேறுபாடு இருக்குமானால் அந்த நபரிடமோ அந்த சபையாரிடமோ, பிரச்சனையைத் தீர்க்க வேண்டும் என்ற ஆவலுடன் நாம் அணுக வேண்டும். உபதேசக் கோட்பாட்டில் பிரச்ச னை வரும்போது, வேதாகமத்திற்கு சென்று, அது என்ன போதிக் கிறது என்பதைக் கண்டு அதின் அடிப்படையில் நடக்க வேண்டும். தேவனுக்கு முன்பாக சரியான காரியங்களைச் செய்வதற்கும் கர்த்தருடைய மக்களோடு ஒற்றுமையைக் காப்பதற்கும் என்ன வெல்லாம் செய்ய வேண்டுமோ, அதை மிகுந்த ஆவலோடும், ஜெபத்தோடும் செய்ய வேண்டும். நாம் ஒரு காரியத்தை குறித்து எரிச்சலுள்ளவர்களாகி, மற்றவர்களின் மனதை புண்படுத்தவோ, அல்லது மற்ற பிராந்திய சபையை வேண்டுமென்றே எதிர்த்து நிற்கவும் கூடாது. வருகின்ற சிறு, சிறு பிரச்சினைக்கெல்லாம் சலித்து கொண்டு சபை அலுவல் கூட்டத்திலிருந்து வெளியேறுவதும் நழுவிக்கொள்வதும் அல்லது வேண்டுமென்றே விலகி நிற்பதும் கூடாது. மாறாக நாம் பிரச்சனையைச் சரிசெய்வதில் ஆவலுள்ளவர் களாய் இருக்க வேண்டும்.

ஒரு பிராந்திய சபையானது தன் அங்கத்தினர்களை அப்பகுதி யிலுள்ள மற்ற சபையின் அங்கத்தினர்களோடு சேர்ந்து தேவனுக்காய் செயல்பட ஊக்கப்படுத்த வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் சகோதர, சகோதரிகளென்றும், உலகின் பிற மக்களை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது எண்ணிக்கையில் குறைந்தவர்களாய் இருக்கிறோம் என்பதையும் உணர்ந்து கர்த்தருக்காய் ஒற்றுமையுடன் செயல்பட

வேண்டும். உலகிற்கு சுவிசேஷத்தையும், ஆண்டவருக்காக வாழ வேண்டும் என்பதையும் எடுத்துச் சொல்லுகின்ற பெரும்பணி நமக்கு முன்பாக இருக்கிறது என்பதையும் உணர வேண்டும். நாம் ஒற்றுமையாய் இருப்பதினாலே இப்பெரும் பணியைச் செய்வதற்கு வேண்டிய பலன் நமக்கு எளிதில் கிட்டும். அதுமாத்திரமல்லாமல், கர்த்தருடைய சித்தத்தை செய்ய முயலும்போது ஆண்டவரும் நம்மோடு கூட இருப்பார்.

நாம் இங்கே ஒற்றுமையைக் குறித்து பேசுவதினால் அல்லது படித்துக் கொண்டிருப்பதினால், இத்தருணத்தை பயன்படுத்தி உங்களிடம் ஒரு வினாத்தொடுக்க ஆசைப்படுகிறேன். அது என்னவென்றால், ஒற்றுமையைக் குறித்து உங்கள் புரிந்து கொள்ளுதல் என்ன? எல்லா பிரிவினரும், தாங்கள் விரும்புவதை நம்புவதற்கு உரிமை உண்டென்று நீங்கள் நம்புகிறீர்களா? பிரிந்திருந்து கொண்டே நாங்கள் எல்லாரும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்ள முடியும் என்று நினைக்கிறீர்களா? அதாவது கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் என்பதில் மாத்திரம் ஒற்றுமையாய் இருக்க முடியும் என்பதையும் நம்புகிறீர்களா? நீங்கள் ஒரு பிரிவினைச் சபையின் அங்கத்தினரா உங்கள் சபையைக் குறித்து வேதத்தில் வாசிக்க முடியுமா? ஒருவேளை நீங்கள் என்னைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்கலாம். நாங்கள் கிறிஸ்துவை நம்பும் பொழுது, இவ்வேறுபாடுகளெல்லாம் ஒரு பொருட்டல்லவே என்று. உங்கள் கேள்வியிலேயே பதில் இருக்கிறது பாருங்கள். நீங்கள் கிறிஸ்துவை நம்பினால் கிறிஸ்து நீங்கள் எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகின்றாரோ அதையே நீங்கள் செய்ய வேண்டும் என்று விரும்பு வீர்கள். கிறிஸ்துவின் ஜெபத்தில், அவர் நாமெல்லாரும் ஒன்றாய் இருக்க வேண்டும் என்பதற்காய் ஜெபித்தார் என்பதைப் பற்றி படித்தோம். ஆண்டவர் பிரிவினையை கண்டனம் பண்ணுகிறார் என்பதற்கு வேத வசனங்களையும் மேற்கோளிட்டுக் காட்டினோம். நாம் கிறிஸ்துவை நம்புகிறோம் என்று சொல்லிக் கொண்டு, அவர் எதிர்க்கிற காரியங்களை நாம் எப்படிச் செய்ய முடியும்? அவருடைய சபையின் அங்கத்தினராய் இல்லாதபோது நாம் எப்படி அவரை விசுவாசிக்க முடியும்? அவரது குடும்பமாகிய சபையில் நாம் ஒரு அங்கமாக இடம் பெறாதபோதும், கர்த்தரோடு மாறுபடும் போதும் நாம் எப்படி பரலோகம் செல்ல முடியும்? என் நண்பர்களே, இக்காரியங்களைக் குறித்து மீண்டும் சிந்திக்கும்படியாகக் கெஞ்சிகிறேன். நான் இங்கு என் சபையை அல்லது என் மதத்தை அல்லது மற்ற எதையாகிலும் கட்டாயமாகத் திணிக்க முயற்சிக்கவில்லை. மாறாக கர்த்தருக்கும், அவர் என்ன செய்யச் சொன்னாரோ அதற்கும் கீழ்ப்படியும்படியாக, உங்கள் ஒவ்வொருவரையும் ஊக்கப்படுத்துகிறேன்.

நாம் ஒரே காரியத்தைக் குறித்துப் பேசவும், ஒரே காரியத்தை செய்யவும் வேண்டுமென்றே ஆண்டவரும் விரும்புகிறார். அவரது அவரது சரீரத்தில் அதாவது ஆவிக்குரிய சரீரத்தில் அவருடைய குடும்பத்தில், ஒற்றுமையாய், ஒரு கூட்ட மக்களாய் திகழ வேண்டு மென்றும் அவர் ஆசைப்படுகிறார். பவுல் எபேசு சபைக்கு எழுதிய தை நினைவில் கொள்ளுங்கள். ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்ட வனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில் நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத் தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடைய வர்களாய் அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டி னால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையா யிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல ஒரே சரீரமும் ஒரே ஆவியு முண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. அவர் எல்லார் மேலும் எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர், என்று கூறுகிறார். (எபே. 4:1-6).

ஆராதிக்கும் போதும், பிரசங்கிக்கும் போதும், தனிநபர் உறவிலும், இந்த உலகில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து மிகப் பெரிய காரியத் தைச் செய்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங் கள். நாம் பார்த்த இந்த காரியங்கள் உங்களுக்கு பிரயோஜனமாய் இருந்திருக்கும் என நம்புகிறேன்.

**J.C. சோட்**

## நரகவாசிகள்

| | |
|---|---|
| மத் 25:41 | - பிசாசும் அவனுடைய தூதர்களும் |
| 2தெச 1:7 | - தேவனை அறியாதவர்கள் |
| 2தெச 1:7 | - சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்கள் |
| வெளி 21:8 | - துன்மார்க்கத்தை நடப்பிக்கிறவர்கள் |
| ரோம 2:8,9 | - கீழ்ப்படியாதவர்கள் |
| 2பேது 2:20-22 | - உண்மையில்லாத கிறிஸ்தவர்கள் |
| மத் 7:21-23 | - அக்கிரமத்தை செய்கிறவர்கள் |

பெண்கள் பகுதி

# மகதலேனா மரியாள்

மகதலேனா மரியாளுக்கு ஒரு முறை 7 பிசாசுகள் பிடித்திருந்தது. எப்படி அவள் முதல் முதலாக இயேசுவோடு தொடர்பை பெற்றாள் என்பது நமக்குத் தெரியவில்லை. அவளுடைய வயது நமக்கு தெரியாது. கலிலேயாக் கடல் ஓரமாக இருக்கும் மக்தலா என்ற பட்டணத்தை சேர்ந்தவள் என்பது நமக்கு தெரியும். இயேசு அவளிடமிருந்து பிசாசுகளை துரத்தினார். அன்றைய நாட்களிலே பிசாசு பிடித்தல் என்பது பொதுவாக இருந்தது. சிறுபிள்ளைகளைக் கூட பிசாசு பிடித்து அலைக்கழிக்கச் செய்ததுமல்லாமல் அவர்களை அழிக்கவும் வகை பார்த்தது. பிசாசுகளை துரத்தும்படியான வல்லமை இயேசுவால், தன் அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்பட்டது.

பொதுவாகவே, பொல்லாத ஆவி பிடித்தவர்கள் சொஸ்தமாக்கப்பட்ட பிறகு கூட, நாம் அவர்களுக்கு தனி முத்திரை குத்தி, நிராகரிக்கப்பட்டவர்களாகவே பார்ப்போம். வேறுபடுத்தப்பட்டவர்களாகவும், விநோதமானவர்களாகவும் அவர்கள் எண்ணப்படுவார்கள். எந்த ஒருவனையும் சுத்தமில்லாதவன் (அசுத்தன்) என்று அழைக்கக்கூடாதென்று தேவன் தன் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார்.

இயேசு தன்னை வெறுக்கவில்லை என்பதை மகதலேனா மரியாள் அறிந்திருந்தாள். எத்தனை காலம் அவள் பிசாசினால் பிடிக்கப்பட்டிருந்தாள், அவளுடைய குடும்பப் பின்னணி எதுவும் நமக்குத் தெரியாது.

அவள் சொஸ்தமான பிறகு இயேசு தன்னை விட்டுப் போக அவள் அனுமதிக்கவேயில்லை. எப்போதும் அவரோடவே இருக்க தீர்மானித்தாள். இயேசு அவளை நேசித்ததோடுமட்டுமல்லாமல், அவளுக்குப் பாதுகாப்பாளராகவும், அவளை புரிந்து கொண்டவராகவும் இருந்தார். மகதலேனா மரியாள் இயேசுவில் அன்பு கூர்ந்தாள்.

கலிலேயாவில் அநேக ஸ்திரீகள் இயேசுவை பின்தொடர்ந்தார்கள். அவருக்கு ஊழியம் செய்தார்கள். அவர்களுள் மகதலேனா மரியாளும் ஒருவள். இயேசு எங்கெல்லாம் சென்றாரோ, அவளும் அங்கே சென்றாள். இவளைப் போன்று சுகம் பெற்ற மற்றவர்கள் சமுதாயத்தில் இடம் பெறாமல் போய்விட்டாலும், இயேசுவின் பாதுகாப்பைப் பெற்றே இருந்தார்கள்.

பின்பு, அவர் பட்டணங்கள் தோறும், கிராமங்கள் தோறும் பிரயாணம் பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்து வந்தார். பன்னிருவரும் அவருடனே கூட இருந்தார்கள்.

அவர் பொல்லாத ஆவிகளையும், வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும் ஏரோதின் காரியக்காரனான கூசாவின்

மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்தி களால் அவருக்கு ஊழியஞ் செய்து கொண்டு வந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந் தார்கள் (லூக்கா 8:1-3).

அன்பு செலுத்தப்படாத தங்கள் கடந்த கால வாழ்க்கையின் மூலமாக பிறரிடம் பழக்கம் வைத்துக் கொள்ள கஷ்டப்படும் ஒருவரை, எவ்வாறு நடத்துவது என்பது குறித்தும் இயேசு ஒரு மாதிரி யை நமக்கு கொடுத்திருக்கிறார். நெடுஞ்சாலைகளுக்கும், காடுகளுக் கும் சென்று யாரெல்லாம் கேட்கிறார்களோ, அவர்கள் எந்த ஜாதியாய் இருந்தாலும் அவர்கள் கடந்த காலம் எப்படியிருப்பினும் அவர்க ளுக்கு போதிக்க வேண்டுமென்று கட்டளை பெற்றிருக்கிறோம். ராஜ்ய மாகிய சபைக்குள் அவர்களை கொண்டு வரவேண்டும். இயேசுவுக்கு அவர்கள் வேண்டும். நாம் இயேசுவைப் போலிருக்க விரும்புகிற வர்களாயிருந்தால் நமக்கும் கூட அவர்கள் வேண்டும்.

சிலுவைப்பாடுகளின் நேரம் வந்தது. தேவ குமாரனாகிய இயேசுவை என்ன செய்யப் போகிறார்களோவென்று மிகுந்த அச்சத்துடன் அங்கு நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போஸ் தலர்கள் பறந்து விட்டனர். ஆனால் அவள் அப்படிச் செய்வில்லை. நூற்றுக்கு அதிபதி மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன் (மாற்கு 15:39) என்று சொன்னபோது அவள் சிலுவைக்கு அருகில் தான் இருந்தாள்.

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு, மெல்லிய துப்பட்டியை வாங்கிக் கொண்டு வந்து, அவரை இறக்கி, சரீரத்தை அந்தத் துப் பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு கல்லைப் புரட்டி வைத்தான். அவரை வைத்த இடத்தை மகதலேனா மரியாளும், யோசேப்பின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள்.

சிலுவையினடியில் கடைசி ஆளாக, கல்லறை அருகில் முதல் ஆளாக இருந்தாள் மகதலேனா மரியாள். வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்த பின்பு, மகதலேனா மரியா ளுக்கு முதல் முதல் தரிசனமானார். அவளிடத்திலிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார். அவள் புறப்பட்டு, அவரோடே கூட இருந்தவர்கள் துக்கப்பட்டு அழுது கொண்டிருக்கையில், அவர்களி டத்தில் போய், அந்தச் செய்தியை அறிவித்தாள் (மாற்கு 16:9,10).

இயேசு அவளிடம் என்ன கூறினார்? அவர் மீண்டும் உயிரோடே இருக்கிறார் என்பதை தெரிந்தவுடன் அவள் முகத்தின் வெளிப்பாடு எப்படியிருந்திருக்கும்? விலை மதிப்பு மிக்க அந்த சந்தர்ப்பம் பரிசுத்தமுள்ளதாயும், வார்த்தைகளால் வர்ணிக்க இயலாத தாயுமிருக்கிறது.

பதினொரு சீஷரிடத்திலேயும் போய் சொன்ன போது அவள் வார்த்தைகளை அவர்கள் நம்பவில்லை. இயேசு தாமே அவர்களுக்கு தரிசனமாகி, அவர்களுடைய அவிசுவாசம், இருதயக் கடினத்திமித்தம் அவர்களைக் கடிந்து கொண்டார். இதினிமித்தம் ஒருவேளை சீஷர்கள் அவளிடம் கோபப்பட்டு இருக்கலாம், பரியாசம் பண்ணி மட்டம் தட்டி

இருக்கலாம். இயேசு அவர்கள் செயல்பாடுகளையும், இருதயக் கடினத்தையும் அறிந்திருந்தார்.

இன்றைக்கும் கூட நாம் யாரையாவது சரியாக நடத்தா விட்டால், தேவன் அவர்களுக்காக வழக்காடி அவர்கள் பட்சத்திலிருப் பார். பிறர் காரியமாக நாம் இருதயத்தை கடினப்படுத்திக் கொண்டு நான் இயேசுவைப் போல் ஜீவிக்கிறேன் என்று சொல்ல முடியாது. இயேசு மகதலேனா மரியாளை இறுதிவரை நேசித்தார்.

இந்த உலகத்திலே இருக்கும் மரியாள்களை நாம் நேசிக்கா விட்டால், விசேஷமாக சபையில் இருக்கும் மரியாள்களில் அன்பு கூராவிட்டால், நம் பாவத்தை நாமே சுமக்கிறவர்களாயிருப்போம். நீ ஞானியானால் உனக்கென்று ஞானியாவாய். நீ பரியாசக்காரனானால் நீயே அதின் பயனை அனுபவிப்பாய் என்று சொல்லுகிறது. (நீதி 9:12).

தேவனும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் பட்சபாதமுள்ளவர்கள் அல்ல. நாம் பாரபட்சம் பார்த்தால் அது பாவம். தேவனால் பாடத்தை கற்றுக் கொண்டபின், ஒருமுறை பேதுரு ஆவி யினால் ஏவப்பட்டு கூறுகையில், ...தேவன் பட்சபாதமுள்ளவ ரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்கு பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் (அப். 10:34,35) என்றார்.

இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு இதைப் பற்றி, பட்சபாத முள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவஞ் செய்து, மீறினவர்களென்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள். யாக்கோபு 2:9 என்று கூறுகிறார்.

ஒரு பாவி மனந்திரும்பியபோது, தூதர்கள் களிப்படை கிறார்கள். நாம் களிகூராவிட்டால், நமக்கு ஏதோ பிரச்சினை என்றுதான் கூற வேண்டும். தேவனுடைய இராஜ்ஜியத்தில் இரண்டாம் நிலை மக்கள் என்று யாரும் கிடையாது. கடந்தகால நிலையை வைத்து அவர்களை இரண்டாம் பட்சமாக நினைக்கக்கூடாது. மகதலேனா மரியாளுடைய வாழ்க்கை அதை நமக்கு நிரூபிக்கிறது.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! சமுதாயத்தில் கெட்டவர்களாக மதிக்கப்படுபவர்கள், இயேசுவால் தெரிந்து கொள்ளப்படும்போது நாம் அவர்களை நேசிக்க வேண்டும். ஒருவர் இன்றைக்கு இயேசுவின் போதனைகளை கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் எடுத்து வாழும் போது அவர்களை ஏற்று ஆவியில் பலப்பட உதவி செய்ய வேண்டும்.

அருமையான சில பாடங்களை மகதலேனா மாரியாள் நமக்கு கற்றுக் கொடுத்திருக்கிறாள். இயேசுவின் போதனைகளை விட்டு விலகாமல், வசனத்துடன் வாழ்ந்து வருவோமானால் நியாயத் தீர்ப்பின் நாளிலே அவரை முக முகமாய் சந்திப்போம். மகதலேனா மரியாள் உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்தபோது பரவசமடைந்தது போல் நாமும் அவரைத் தரிசித்து வர்ணிக்க முடியாத அந்த அனுபவத் தை பெற்றுக்கொள்ள சிலுவையினால் சம்பாதித்த சபையில் இறுதி வரை நிலைத்திருப்போம்.

**R.R.NAYAGAM**

வாலிபர் பகுதி

# நீ கர்த்தருக்கு என்னச் செய்தாய்

**வா**லிப நெஞ்சங்களே, உங்களை இந்தக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். பிரியமானவர்களே தேவன் நமக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்திருந்தாலும் தேவன் எனக்கு எதையுமே செய்யவில்லை என்று நன்றி கெட்டவர்களாய் அநேக வேளை களில் நாம் அங்கலாய்த்துக் கொள்கிறோம். இந்த பூமியில் நமக்கு தேவன் உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றை கிருபையாக தந்திருக்கும் போது உயர பறக்க நினைக்கிறோம். அநேகர் கர்த்தரிடத் திலிருந்து பெற்றுக் கொள்வதிலேயே குறியாக இருக்கின்றனர். தேவன் நம்மீது அன்பு வைத்தபடியினால்தான் தம்முடைய ஒரே பேறான குமாரனையே நமக்காகக் கொடுத்தார், இயேசுவும் நம்மில் அன்புகூர்ந்தபடியினால் தான் நமக்காக தம்முடைய ஜீவனையே விட்டார். சங்கீதக்காரன் "கர்த்தர் தனக்கு செய்த நன்மைகளை நினைத்துப்பார்த்து இப்படியாகச் சொல்கிறார் கர்த்தர் எனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்" (சங்கீதம் 116:12). இங்கே சங்கீதக்காரன் கர்த்தர் தன்னை அபரிதமாக ஆசீர்வதித்ததை உணர்ந்து பேசியிருக்கிறதை நாம் காண முடியும். சங்கீதக்காரன் அங்கேயே நின்று விடாமல் கர்த்தர் தன்னுடைய வாழ்க்கையிலே செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் தான் என்னத்தைச் செலுத்தப்போவதாக கூறுகிறார்.

நாமும் கூட தேவன் நமக்கு செய்த நன்மைகளை நினைத்து அதற்குப் பதிலாக அவருக்காக நாம் செய்யப்போகிற காரியத்தை குறிப்பாக சிந்தித்துப் பார்க்க வேண்டும், நம்முடைய முழு பலத்தோடு அவருக்கு சேவை செய்ய வேண்டும். தேவன் நமக்கு கொடுத்திருக்கிற எல்லா தாலந்துகளையும், நேரங்களையும் அவருக்காக பயன்படுத்த வேண்டும். சுருக்கமாக சொல்லப்போனால் நம்மை முழுமையாக அவருக்கென்று அர்ப்பணிக்க வேண்டும். மேலும் சங்கீதக்காரன் சங்கீதம் 116:13ல் சொல்லும் போது கர்த்தர் தனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளப் போவதாகக் கூறுகிறார். கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் என்பது கர்த்தருக்கு கீழ்ப்படிவது என்று பொருள்படும். தேவன் நமக்கு செய்த நன்மைகளை நினைத்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தை களை நாம் மறந்து விடக்கூடாது (அப். 20:35). எனதருமை வாலிப நெஞ்சங்களே தேவன் உங்களுக்கு என்ன செய்தார் என்பதைக் காட்டிலும் நீங்கள் தேவனுக்கு என்ன செய்தீர்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். உங்களுக்கு

உண்டானவற்றையெல்லாம் தேவனுக்கு கொடுங்கள். வேதாகமத்தில் தேவனுக்கென்று அவருடைய ஊழியத்திற்கென்று கொடுத்தவர்கள் எந்த ஒரு நிலையிலும் குறைவுபட்டதே இல்லை. எப்படி மண்ணைத் தோண்ட தோண்ட தண்ணீரின் அளவு பெருகுமோ அதேப் போல நாம் கர்த்தருடைய ஊழியத்திற்கென்று கொடுக்க கொடுக்க கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கும் அளவும் பெருகும். கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும் என்பதை நாம் நம் வாழ்க்கையில் அனுபவித்துப்பார்க்க கர்த்தருக்கென்று நாம் கொடுக்க வேண்டும். இப்போது நாம் முதலில் தன்னையும், இரண்டாவதாக தனக்கு உண்டான எல்லாவற்யையும் கர்த்தருக்குக் கொடுத்த பர்னபாவிடமிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்ளலாம்.

**I. உதாரத்துவத்திற்கும், உதவிச் செய்யும் மனப்பான்மைக்கு உதாரணமாய் திகழ்கிறான்.**

ஆதி திருச்சபையின் விசுவாசிகள் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்து. உடனே நீங்கள் ஆதிக்கிறிஸ்தவர்கள் கம்யூனிசக் கொள்கையைப் பின்பற்றினார்கள் என்று நினைத்துவிடவேண்டாம். அவர்கள் ஒருவருக்கொருவர் அன்பாயிருந்தபடியால் மற்றவர்களுடைய தேவைகள் சந்திக்கப்படுவதற்காக வீடுகளையும், நிலங்களையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அதை அப்போஸ்தலர்கள் சபையாரில் தேவையில் இருந்தவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தார்கள் இதினிமித்தம் ஒருவருக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. அப்போது அதாவது அந்த முதல் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையான அக்கறை உடையவர்களாயிருந்திருக்கிறார்கள். தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான் என்று நீதிமொழிகள் 28:27ல் சொல்லப்பட்டிருக்கிறவைகளை சபையார் சபை ஆரம்பிக்கப்பட்ட நாட்களிலேயே செயல்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் சபை ஆரம்பிக்கப்பட்டு இருபது நூற்றாண்டுகள் உருண்டோடிய பின்னும் இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டில் ஒருவருக்கொருவர் சபை விசுவாசிகள் அக்கறையில்லாமலும், உதவிச் செய்யும் மனப்பான்மையும் ஒட்டு மொத்தமாக ஐக்கியம் இல்லாதிருப்பது இவர்களும் கிறிஸ்தவர்கள் தானா என்று ஐயத்தை உண்டாக்குகின்றது.

சரி, நாம் மறுபடியும் முதல் நூற்றாண்டிற்கே திரும்பிச் செல்வோம். கிறிஸ்துவை நம்பி, தனக்கு உண்டானவைகளையெல்லாம் பொதுவிலே வைத்து, புத்துணர்ச்சியுடன் புதுபொலிவு பெற்று சபையை சீராட்டி, பாராட்டி வளர்த்து வந்த சீஷர்களில் ஒருவனாகத்தான் நாம் பார்க்கப்போகிற பர்னபா என்னும் மறுபேர் பெற்றவனுமாகிய யோசே இருந்தான். இந்த யோசேக்கு அப்போஸ்தலர்கள் தான் ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபா என்னும்

பெயரை வைத்தார்கள். அவர்கள் இந்தப் பெயரை யோசேக்கு வைத்தது எவ்வளவுப் பொருத்தமானது என்று நாம் பின்பு உணர்ந்து கொள்வோம். முதலாவதாக இந்த பர்னபா ஒரு லேவியனாய் இருந்திருக்கிறான் (அப் 4:36) லேவி கோத்திரத்தை தேவன் தம்முடைய ஆசாரிய ஊழியத்தைச் செய்யும்படியாக தெரிந்தெடுந்திருந்தார் (எண்ணாகமம் 3:9-13) லேவியர்களுக்கென்று பரிசுத்த நியமத்தில் பங்கொன்றுமில்லை என்று எண்ணாகமம் 18:20-24 வசனங்களில் பார்க்கிறோம். அப்படியிருக்கும்போது லேவியனான பர்னபாவுக்கு நிலம் எங்கே இருந்து வந்தது? என்ன காதில் பூ சுற்றுகிறீர்களா என்கிறீர்களா? பர்னபாவின் சொந்த ஊர் சீப்புரு தீவு என்று அப் 4:36ல் நாம் பார்க்கிறோம். எனவே, தன்னுடைய சொந்த ஊரிலே பர்னபாவுக்கு சொந்த நிலம் இருந்திருக்க வேண்டும் அதை விற்று தான் பர்னபா அப்போஸ்தலர்களிடம் கொடுத்திருக்கிறான். மண்ணுக்காக, பொன்னுக்காக சண்டையிட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நாட்களில் தன்னுடைய சொந்த நிலத்தை விற்று சபையாருக்கு உதவியிருக்கும் இந்த பர்னபா "வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழமாய்" திகழ்கிறான்.

## II. தன்னலமற்ற பர்னபா தனித்துவம் வாய்ந்தவனாகத் திகழ்கிறான்

பர்னபா எருசலேம் சபையார் மீது தனக்கிருந்த தணியாத நேசத்தின் நிமித்தம் தனக்கு உண்டாயிருந்த நிலத்தை விற்று அதில் ஒன்றையும் தனக்கென்று வைத்துக்கொள்ளாமல் அதின் கிரயத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். இன்று சமுதாய சீர்திருத்த நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள், சமூக சேவை செய்பவர்கள் தங்களுடைய நிலங்கைள விற்று பிறருக்கென்று உதவி செய்வதை அரிதாகத்தான் காண முடியும். ஆயினும் சொந்த நிலங்களை விற்று சபையாருக்காக கொடுப்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? இப்படி உதாரத்துவமாய் பர்னபா கொடுத்ததினால் எந்த வகையிலும் அவன் குறைந்து போகவில்லை. தேவன் பர்னபாவை மிக வல்லமையாக ஊழியத்தில் எடுத்து பயன்படுத்தியிருக்கிறார். சொல்லப்போனால் பவுல் மனமாற்றமடைந்து மூன்று வருடங்களுக்குப் பிறகு எருசலேமுக்கு வந்து அங்கிருந்த கிறிஸ்தவர்களோடு தன்னைச் சேர்த்துக் கொள்ள முயற்சித்தபோது இந்த பர்னபா தான் பவுலை மற்ற அப்போஸ்தலர்களிடம் அறிமுகம் செய்து வைத்தான் (அப் 9:26,27) சவுல் தேவனுக்கு விரோதமாக செயல்பட்டபடியினால் பர்னபா சவுலை வெறுக்காமல் சவுல் மனந்திரும்பியதை நம்பி, மன்னித்து தேவனுடைய ஊழியத்தில் அவரை பங்கு பெறச் செய்யும் தன்னலமற்றத் தன்மையை பர்னபா பெற்றிருந்தார். ஊழியத்தின் பாதையில் மற்றவர்களையும் முன்னேற்றும் முனைப்புடையவராக பர்னபா திகழ்ந்திருக் கிறான். அதோடு கூட பர்னபாவின் ஊழிய வாஞ்சையை கண்டறிந்த எருசலேம் சபையார் அந்தியோகியா பட்டணத்தில் அநேக

ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பின தை கேள்விப் பட்டு பர்னபாவை அந்தியோகியா சபைக்கு அனுப்பி வைத்தார்கள். பர்னபா அங்கே போய்ச் சேர்ந்து தேவனுடைய கிருபை யைக் கண்ட போது, சந்தோஷப்பட்டு, கர்த்தரி டத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக் கும்படி எல்லோருக்கும் புத்தி சொன்னான் (அப். 11:21-23).

இந்த பர்னபா மத்தேயு 19 ஆம் அதிகாரத்தில் நாம் காணும் அந்த பணக்கார வாலிபனிடமிருந்து முற்றிலுமாக வேறுபடுகிறான். ஏனென் றால், அந்த வாலிபன் எத்தனையோ நற்குணங்களைப் பெற்றிருந் தாலும் இயேசு அவனைப் பார்த்து உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு என்று சொன்னபோது துக்கமடைந்தவ னாய்ப் போய்விட்டான் என்று பார்க்கிறோம். ஆனால் பர்னபா தன்னை அப்போஸ்தலர்கள் எதுவும் கேட்காதபோதே தானாகவே முன்வந்து தன்னுடைய நிலத்தை விற்று அதை சந்தோஷமாக எருசலேம் சபை யாருக்கு பகிர்ந்து கொடுத்தது "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்" என்ற நீதி 19:17ல் சொல்லப்பட்டிருப்பதை நமக்கு நினைவுப்படுத்துகிறது. எனவே, கர்த்தர் நமக்கு என்ன செய்தார் என்பதை விட்டுவிட்டு நாம் கர்த்தருக்கு என்ன செய்தோம் என்று சிந்தித்து செயல்படுவோம். கர்த்தர் அதற்கு உதவிச் செய்வாராக! ஆமென்.


**பென்னி மார்ட்டின்**

## நாளும், நடப்பும்

1. அமெரிக்காவில் 44வது ஜனாதிபதியாக அதே நாட்டில் அடிமைகளாயிருந்த கருப்பர் இனத்தைச் சேர்ந்த பராக் ஒபாமா அவர்கள் பதவி ஏற்க இருக்கிறார்.
2. இலங்கை பிரச்சினைக்கு தீர்வு காண தமிழக தலைவர்களிடையே ஒருங்கி ணைப்பு இல்லாதது துரதிஷ்டவசமானது.
3. கணிணி துறையில் சமூக நீதி கடைபிடிக்கப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
4. சர்வதேச அளவிலான நிதிநெருக்கடி இந்தியாவிலும் தன் வேலையைக் காட்ட ஆரம்பித்திருக்கிறது.
5. இராணுவத்தில் இந்துத்துவம் ஊடுருவுவதைத் தடுக்க மார்க்சிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.
6. இந்திய கிரிக்கெட் வரலாற்றில் தலைமைப் பொறுப்பில் முத்திரை பதித்த சௌரவ் கங்குலி ஓய்வு பெற்றார்.
7. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கிரிக்கெட் டெஸ்ட் தொடரை 28 ஆண்டு களுக்குப் பிறகு வென்று இந்தியா சாதனை படைத்திருக்கிறது.

சிறுவர் பகுதி

# காதுகளால் பார்க்கும் விலங்கினம்



எனக்கன்பான சிறு பிள்ளைகளே. உங்கள் யாவரையும் மீண்டும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன். இம்மாதத்தில் ஒரு வித்தியாசமான மிருகம் பற்றி நாம் படிப்போம்.

மிருக ராஜ்ஜியத்தில், எறும்பு முதல் யானை வரை, நாம் விதவிதமான மிருகங்களைப் பார்க்கிறோம். தேவனுடைய படைப்பாக அவைகளில் ஆச்சரியப்படத்தக்க ஒன்று காதுகளால் பார்க்கும் மிருகம்.

அநேக மிருகங்களுக்கு நல்ல கண் பார்வை உண்டு. தங்கள் பார்வையை, உணவு வேட்டைக்கு அவை பயன்படுத்துகின்றன. உதாரணமாக, ஆந்தைகளுக்கு பெரிய கண்கள் உண்டு. அவைகளை வைத்து அவை இரவில் ஆகாரம் தேடுகிறது. அதுபோல, பூனைகள் மனிதர்கள் பார்க்க முடியாத இரவு நேரங்களில் தங்கள் கண்களை விரிவாக்கி, இரை தேடுகிறது. அதே போல, உயரப் பறக்கும் கழுகுகள், பூமியிலே திரியும் சுண்டெலியை துல்லியமாக கண்டு கொள்ளும் பார்வையை உடையதாய் இருக்கிறது.

ஆனால், சில பறவைகளுக்குச் சிறிய கண்களும், சுமாரான பார்வை கொண்டதாய் இருக்கிறது. அவைகள் எப்படி தங்கள் உணவைத்தேடும்? தேவன், அப்படிப்பட்டவைகளுக்கு

காதுகளால் பார்த்து உணவைத் தேடும் வேறு வழியைக் கொடுத்திருக்கிறார். மிருக இனத்தின் ஒன்றாகக் கருதப் படும் வெளவால் இவ்வகை யைச் சார்ந்தது. வெளவாலுக்கு மிகச் சிறிய கண்களே உண்டு. சில வெள வால்களை நீங்கள் கவனித்துப் பார்த்தால், சுலப மாக நகரக்கூடிய பெரிய காது களை உடையதாய் இருக்கும். விஞ்ஞானிகள், இந்த வெள வால் காதுகளால் பார்க்கிறது என்று கூறுகிறார்கள்.

அது எப்படி என்று பார்ப்போம். மனிதர்களால் கேட்க முடியாத ஒரு சத்தத்தை வெளவால்கள் ஏற்படுத்து கிறது. எதிரே இருக்கும் பொருள் களின் மீது படும்படி யான ஒலி அலைகளை அது அனுப்பு கிறது. நொடிப்பொழுதில், அவைகளின் காதுகளுக்கு அப்பொருள்களிலிருந்து, எதிரொலி வருகிறது. அந்த எதிரொலி யைக் கொண்டு, அந்தப் பொருள் எந்த திசையில், எவ்வளவு தூரத்தில் இருக்கிறதென்பதையும் தெரிந்துகொள் கிறது. அதன் மூலம், தனக்குத் தேவையான ஆகாரத்தை அவை பெற்றுக்கொள்கிறது. இதைத் தான் ஆங்கிலத்தில் Echo-location முறை என்று சொல்லு கிறார்கள்.

எதிரொலி மூலம் கண்டறி யும் தன்மையைக் கொண்டு, இந்த வெளவால் கடுமையான பகுதிகளான குகை மற்றும் அடர்ந்த காடுகளிலும், சிரமமில் லாமல் பறக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஒலி அலையின் மூலமாகத்தான் பூச்சிகள் இருக்கும் இடத்தை அறிந்து, அவை பறந்து கொண்டி ருந்தாலும் வெளவால் பிடித்து தின்கிறது.

சோதனைக்காக, சிறுகற் களை, வெளவால்களுக்கு முன்பு வீசிப்பார்த்தபோது, அதாவது பூச்சிகள் என்று நினைத்துப் பிடிக்கிறதா என்று பார்த்த போது, அவைகளைப் பிடிக்க வில்லை. ஒன்று, சாப்பிடுவதற்கு ஏற்றதா, இல்லையா என்பதை "ஒலி அலையை" வைத்தும், "எதிரொலி" யை வைத்தும் தெரிந்து கொள்கிறது.

மிருகங்கள் சிரமமில்லா மல் வாழும்படியாகவே தேவன் அவைகளை வடிவமைத்திருக் கிறார். தேவனால் படைக்கப் பட்ட மிருகங்களிடமிருந்து, பல வற்றை மனிதன் கற்றிருக்கி றான். கற்றுக்கொள்வதற்கு இன்னும் ஏராளம் உண்டு. "தேவ னுடைய கரங்களின் கிரியை எவ்வளவு பெரிதாயிருக்கிறது" தேவனுக்கு மகிமை உண்டா கட்டும்.

**Bert Thomson Abel R. Nayagam**

# விசுவாசத்தின் அடிப்படைகள்

சபை வரலாறு என்கிற நம்முடைய பாடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய சில தலைப்புகளை நாம் விவரமாக ஆராய்ந்து வருகிறோம். அந்த தலைப்புகளில் ஒன்று நீங்களும், நானும் தேவனுடைய வார்த்தையைாகிய சத்தியத்தின் அன்பை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். அந்தக் கருத்தில் கடந்த மாதம் இரண்டு வசனங்களை நாம் படித்தோம். இனி, அது சம்பந்தமாக அநேக வசனங்களை நாம் பார்ப்போம்.

*சங்கீதம் 119:97யை* நாம் வாசிக்கும் போது இங்கே சங்கீதக்காரன் வேதத்தை எவ்வளவாய் நேசித்திருக்கிறார், வேதத்தில் எவ்வளவாய் பிரியமாயிருக்கிறார் என்று பாருங்கள்! அவர் பேசின அந்த வார்த்தைகளிலிருந்து எந்தவித சந்தேகமுமின்றி சங்கீதக்கார னுடைய பிரியத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். அவருடைய இருதயமானது தேவனுக்கான அன்பினாலும், தேவனைப்பற்றிய நன்றியினாலும் நிறைந்திருந்தது! சங்கீதக்காரன் வெளிப்படையாகவே தேவனிடத்தில் "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக் கிறன்" என்று அறிவிக்கிறார்.

சங்கீதக்காரன் தேவனுக்கான அன்பையும், அவருடைய வார்த்தைக்கான அன்பையும் எப்படிக்காட்டினார்? இந்த தேவனுடைய மனுஷன் நாள் முழுவதும் தேவனுடைய வேதத்தை தியானித்தார். அதாவது தேவனுடைய வேதத்தை நாள் முழுவதும் விவரமாகவும், ஆழமாகவும் சிந்தித்திருக்கிறார்.

பிரியமானவர்களே, நீங்களும் நானும் எப்படி இருக்கிறோம்? நம்முடைய அன்புள்ள தேவன் நம்முடைய இருதயங்களைப் பார்த்தால் அவர் மீதும், அவருடைய வார்த்தை மீதும் இவ்விதமான அன்பை காண்பாரா?

நீங்களும், நானும் தேவனுடைய வார்த்தைகளில் பதிவு செய்யப்பட்டிருக்கிற தேவனுடைய சித்தத்தை அனுதினமும் ஆழமாக சிந்தித்தால் சபை வரலாற்றில் நாம் படித்தது போல அங்கே காணப்படுகின்ற மத சம்மந்தமான தவறுகளை நாம் களைய முடியும்!.

II தெசலோனிக்கேயர் *2:9-12 :* வசனங்களில் பிரியமானவர் களே, தேவனிடத்திலிருந்து வரும் இந்த வார்த்தைகள் உங்களை பயமுறுத்துகிறதா? அவைகள் எப்படி பயமுறுத்துகின்றன!!

இந்த வசனங்களில் ஆவிக்குரிய பிரகாரமாக கெட்டுப்போகிற தங்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படாத ஆக்கினைக்குள் ளாக்கப்படும் மக்களைப் பற்றி தேவன் பேசுகிறார். இந்த ஜனங்கள் நித்திய ஆக்கினைக்குட்படும்படிக்கு அவர்கள் என்ன பாவம் செய்தார் கள்? தேவன் சொல்கிறதை மிக ஜாக்கிரதையாக கவனியுங்கள்.

முதலில், அவர்கள் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அங்கீகரிக்க வில்லை. மறுபடியும் தேவன் தம்முடைய வார்த்தையை நேசிப்பதன் நித்திய முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். இரண்டாவது, இந்த ஜனங்கள் சத்தியத்தை விசுவாசியாமல் இருப்பதை தெரிந்து

கொண்டார்கள். தெளிவாகவே, நீங்களும், நானும் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அங்கீகரிக்காமல் போனால், அந்த சத்தியத்தை நாம் விசுவாசிக்கமாட்டோம்!.

மூன்றாவதாக, இந்த ஜனங்கள் சாத்தானைப் பின்பற்றுபவர்களினால் நடத்தப்படும் பொய்யான அற்புதங்களினால் தாங்கள் வஞ்சிக்கப்பட தங்களை அனுமதிப்பார்கள். நம்முடைய சபை வரலாறு பாடமானது தேவனுடைய சுத்தமான, வல்லமையுள்ள வார்த்தைகளுக்குப் பதிலாக மனுஷருடைய உபதேசங்களைப் போதித்த கள்ள போதகர்களால் வஞ்சிக்கப்பட தங்களை அனுமதித்த அநேக ஜனங்களைப் பற்றிய உதாரணங்களை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறது.

மேலும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த வாக்கியத்தை ஜாக்கிரதையாக கவனியுங்கள். நீங்களும், நானும் சத்தியத்தின் மேலுள்ள அன்பை தொடர்ந்து அங்கீகரிக்காமல் போனாலும், சத்தியத்தை தொடர்ந்து விசுவாசியாமலும் இருந்தால், தேவன் என்ன செய்வார்? ஆம், தேவன் நம்மீது கொடிய வஞ்சகத்தை அனுப்புவார்!

நிச்சயமாகவே, உங்களுக்கும், எனக்கும் அந்த கொடிய வஞ்சகத்தை விசுவாசிப்பதற்கும், சத்தியத்தை விசுவாசிப்பதற்கும் உரிமை உண்டு. இரண்டில் ஏதாவது ஒன்ற நாம் தெரிந்தெடுக்க வேண்டும்.

ஆனால், ஒருவர் தொடர்ந்து சத்தியத்தின் மேலுள்ள அன்பை அங்கீகரியாமலும், சத்தியத்தை தொடர்ந்து விசுவாசியாமலும் இருந்தால் அந்த மனிதன் கடைசியில் எதை விசுவாசிப்பான்? அவன் பொய்யை விசுவாசிப்பான் என்று தேவன் சொல்கிறார்.

நான்காவது, இப்படிப்பட்ட மக்கள் அநீதியில் பிரியமாயிருப்பார்கள். அநீதி என்பது தேவனுடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தேவ நீதிக்கு எதிரானதாகும். இப்படிப்பட்ட பாவமான நடத்தைக்கான மூலகாரணம் என்ன? சத்தியத்தின் மேலுள்ள அன்பை அங்கீகரிக்காமல் போனது தான்! ஒருவர் தேவனுடைய வார்த்தையை நேசிக்க மறுத்தால் அவருக்கு என்ன நடக்கும்? இப்படிப்பட்ட மக்கள் சத்தியத்தை விசுவாசியாமல், பிறரால் தாங்கள் வஞ்சிக்கப்பட அனுமதி கொடுத்து விட்டு, இறுதியில் அநீதியில் பிரியமாயிருப்பார்கள். அதன் விளைவாக அவர்கள் மனந்திரும்பி கர்த்தருக்கு கீழ்ப்படியாத பட்சத்தில் நித்திய ஆக்கினைக்குள்ளாக்கப்படுவார்கள்!.

பிரியமானவர்களே, நாம் ஒவ்வொருவரும் நம்முடைய முழு இருதயத்தோடும் கர்த்தரில் அன்பு கூர்ந்து அவருடைய சத்தியத்தை நேசித்து, சத்தியத்தை விசுவாசித்து அவருக்கும் அவருடைய சத்தியத்திற்கும் கீழ்ப்படிந்து நம்மால் இயன்றவரை ஒவ்வொரு வருக்கும் போதிப்போம்! அப்போதுதான் அநேக நூற்றாண்டுகளாக மனிதர்கள் செய்திருக்கிற மதசம்மந்தமான பிழைகளை நாம் தவிர்க்க முடியும்.

சபை வரலாறு என்கிற தலைப்பின் கீழ் நாம் அடுத்ததாக கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் இதோ.

விசுவாசத்திலிருந்து வழிவிலகிச் செய்தல் அடுத்த தலைமுறையில் கூட சம்பவிக்கும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

*உபாகமம் 6:4-9 வசனங்களை வாசியுங்கள்:* இந்த வசனங்களில் மோசே இஸ்ரவேல் ஜனங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கட்டளையிடுகிறார்? தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழுபலத்தோடும் அன்பு கூர வேண்டும் என்று கட்டளையிடுகிறார். இவைகளை மாத்திரம் தானா மோசே அவர்கள் செய்யும்படி கட்டளையிட்டார்? இல்லை! மோசே அவர்களிடம் பேசின தேவனுடைய வார்த்தைகளை அவர்கள் தங்கள் இருதயத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டளை யிட்டார்.

ஆனால் தேவனுடைய மனுஷன் அங்கேயே நின்றுவிட வில்லை. மோசே அந்த இஸ்ரவேலர்களைப் பார்த்து அவர்களுக்கு கட்டளையிட்டயாவற்றையும் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கருத்தாய் போதிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். இதை தயவு செய்து கவனித்துப் பாருங்கள் பிரியமானவர்களே மோசே அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தேவனுடைய வார்த்தைகளை கருத்தாய் போதிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார் அல்லவா! எப்படி கருத்தாய்? அவர்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கும் போதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிற போதும் தேவனுடைய வார்த்தைகளை கருத்தாய் இஸ்ரவேலர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டும் என்று மோசே கட்டளை யிட்டார்.

வேறுவிதமாகச் சொன்னால் இஸ்ரவேலர்கள் தேவனுடைய வார்த்தைகளை தங்கள் பிள்ளைகளுக்கு தொடர்ந்து போதிக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்தார். பிரியமானவர்களே, நாம் இன்றைய நாட்களில் தேவனுக்கென்று குறைவான காரியங்களை செய்துவிட்டு அல்லது குறைந்த அளவில் போதனைகளை செய்து விட்டு தேவனைப் பிரியப்படுத்த முடியாது!.

எட்டு, ஒன்பது வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தேவனுடைய கருத்து என்ன? தேவன் தம்முடைய பிள்ளைகள் தன்னுடைய வார்த்தைகளை தங்கள் இருதயத்திலும் தங்கள் பிள்ளை களின் இருதயத்திலும் எப்போதும் வைக்க வேண்டும் என்று எதிர் பார்த்தார். இன்றும் கூட தேவன் உங்களிடமிருந்தும் என்னிடமிருந் தும் அதை எதிர்பார்க்கிறார். அப்படி தேவன் எதிர்பார்ப்பதற்கான காரணம் என்னவென்றால் அன்று அவர்களும் இன்று நாமும் தேவன் பேரில் நமக்கு இருக்கும் விசுவாசத்திலிருந்து விழுந்து போகக்கூடாது என்பதற்காகத்தான்! எனவே தேவன் அனுதினமும் கருத்தாய் நம்முடைய பிள்ளைகளுக்கு தேவனுடைய வார்த்தைகளை போதிப்ப தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார்.

*நியாதிபதிகள் 2:7-12 :* வசனங்களை நாம் வாசிக்கும் போது ஜனங்கள் எத்தனை வருடங்கள் கர்த்தரை சேவித்தார்கள்? யோசுவாவின் நாட்களிலும், யோசுவாவுக்குப் பின்பு உயிரோடிருந்த வர்களுமாகிய மூப்பரின் சகல நாட்களிலும் ஜனங்கள் கர்த்தரைச் சேவித்தார்கள். யோசுவாவும் அந்த சந்ததியாரும் மரித்த பிறகு என்ன நடந்தது? கர்த்தரையும் அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியையை

யும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்குப் பின் எழும்பிற்று. தெளிவாகவே, இஸ்ரவேலர்கள் தேவனுடைய வார்த்தைகளை கருத்தாய் படிக்கவும் அந்த வல்லமையுள்ள செய்தியை தங்கள் பிள்ளைகளுக்கு ஆழமாக தொடர்ந்து போதிக்கவில்லை என்று தான் தெரிகிறது. ஜனங்கள் வேதாகமத்தை ஒழுங்காக படிக்கத்தவறி அதை ஒழுங்காக தங்கள் பிள்ளைகளுக்கு போதிக்கத் தவறும் போது என்ன நடக்கிறது என்பதை பாருங்கள்.

இரண்டாவது, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானவைகளைச் செய்தார்கள்! தேவனுடைய வார்த்தை களை நம்முடைய மனதில் நிலைநாட்டவில்லையென்றால், தேவன் எதை பொல்லாப்பாய்ச் சொல்கிறாரோ அதை செய்வதில் சீக்கிரமாக ஈடுபட்டுவிடுவோம்.

மூன்றாவது, அந்த கலகமுள்ள ஜனங்கள் கள்ள தேவர்களாகிய பாகால்களைச் சேவித்தார்கள்.

நான்காவது, இஸ்ரவேன் தங்கள் பிதாக்களிலர்கள் தேவனாகிய கர்த்தரை விட்டுவிட்டார்கள்! அவர்கள் விழுந்து போய் விட்டார்கள்! இதைத்தானே அப்படியே நம்முடைய சபை வரலாறு பாடத்திலே படித்திருக்கிறோம்.

இஸ்ரவேலர்கள் கைவிட்ட தேவனாகிய கர்த்தரைப்பற்றி மோசே எப்படியாக விவரிக்கிறார்? அந்த தேவன் தான் இஸ்ரவேலர் களை அன்பாகவும், கிருபையாகவும், வல்லமையாகவும் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து புறப்படப்பண்ணின தேவனாகிய கர்த்தர் என்று மோசே விவரிக்கிறார். அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங் களையும், வல்லமையையும் மறந்து விட்டு தேவனிடத்தில் நன்றி யில்லாமல் போனார்கள்.

பிரியமானவர்களே இன்று நீங்களும் நானும் இதே விதமான குற்றத்தை செய்ய முடியுமா?

அந்த ஜனங்களுடைய நன்றி இல்லாத கலகமுள்ள முட்டாள்த் தனமான பாவமான நடத்தைகளுக்கு கர்த்தருடைய பதில் என்னவா யிருந்தது? அவர்கள் கர்த்தருக்கு கோபமூட்டினார்கள்! அதே விதமான பாவங்களை நாம் இன்றைய நாட்களில் செய்யும் போதும் அதே கர்த்தர் உங்கள் மீதும் என்மீதும் கோபமடைவார். எனவே நாம் தேவகோபாக்கினைக்கு தப்பித்துக் கொள்ள நீங்களும் நானும் தேவனுடைய வார்த்தைகளைத் தொடர்ந்து படித்து, வாழ்ந்து அந்த வல்லமையுள்ள வார்த்தையை நம்முடைய பிள்ளைகளுக்கும் மற்ற வர்களுக்கும் போதிக்க வேண்டும்.

கர்த்தருக்கு சித்தமானால் அடுத்த மாதம் சபை வரலாறு என்கிற நம்முடைய பாடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய காரியங் களை சுருக்கமாக பார்ப்போம். அதன் பின்பு இந்த தொடரில் ஆறாவது பாடத்தை நாம் படிக்கத் தொடங்குவோம்.

***Charlie Dipalma*** ***Benny Martin***

# எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது

வானத்தையும் பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் உண்டு பண்ணின நம்முடைய நியாயாதிபதியாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களை வாழ்த்துகிறேன். நம்முடைய இதய துடிப்பாய் இருக்க கூடிய பரிசுத்த வேதாகமத்தில் நம்முடைய தேவனைக் குறித்து ஆதி முதலாய் வேதாகமம் அவருடைய குண நலன்களை பேசி வருகிறது. தேவன் ஆவியாக இருந்தாலும் அவரும் நம்மைப் போல சந்தோஷமும், மனஸ்தாபமும் வேதனையும் உடையவராக இருக்கிறார் என்று வேதம் தெளிவாகவே பேசுகிறது. நம்முடைய தேவன் பரிசுத்த வேதாகமத்தில் சில மனிதர்களைக் குறித்து சந்தோஷப்பட்டும் இருக்கிறார், சிலரை குறித்து மனஸ்தாபப் பட்டு இருக்கிறார் அநேகரைக் குறித்து வேதனையும், கோபமும் உடையவராகவும் இருந்து இருக்கிறார்.

இப்படி தேவனுடைய குணநலன்கள் இருந்தாலும் அவருடைய குணநலன்களில் ஒன்றாக இருக்க கூடிய மனஸ்தாபத்தைக் குறித்துதான் இன்றைய கட்டுரையில் நாம் கற்றுக் கொள்ள போகிறோம். இந்த "மனஸ்தாபம்" என்பது தேவன் மனுஷனிடம் நீதியை எதிர்பார்த்து இருக்கும் போது அவனிடமிருந்து அநீதி வெளிப்படும் போது அதனிமித்தமாக ஏற்படும் மனநிலையே மனஸ்தாபமாகும்.

தேவன் இந்த அண்டசராசரங்களையும் படைத்த பின்பு பல தலைமுறைகளுக்கு பிறகு நோவாவுடைய காலத்திலே உலகத்தை கண்ணோக்கி பார்த்த போது அவருக்கு மிகப்பெரிய ஏமாற்றமே இருந்தது, இதைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு தாம் பூமியிலே மனுஷனை உண்டாகினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப் பட்டார் அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது" (ஆதி 6:5,6) என்று கூறுகிறது.

பிரியமானவர்களே உலக மக்களிடம் தேவன் நீதியை எதிர்பார்த்து அவர்களிடத்திலிருந்து அநீதி வெளிப்பட்டபோது அவர் மனஸ்தாப பட்டு, பின்பு ஜலப்பிரளயத்தை வரவழைத்து இந்த பாவ உலகத்தை அழித்துப்போட்டார். ஆனால், நோவாவும் அவன் குடும்பத்தாரும் தேவன் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து பேழையிலே இருந்ததினாலே ஜலத்திலிருந்து காக்கப்பட்டார்கள். அதே கர்த்தர் பல வருடங் களுக்கு பிறகு "மனஸ்தாபப்பட்டார்". இந்த முறை "உலக மக்களுக் காகவோ" அல்லது "தனிப்பட்ட ஒரு தேசத்திற்காகவோ" அல்லது "தனிப்பட்ட குடும்பத்திற்காகவோ" மனஸ்தாபப்படாமல் "ஒரே ஒரு" மனுஷனுக் காக மனஸ்தாபப்பட்டு இருக்கிறார். அவன் வேறு யாருமல்ல இஸ்ரவேலின் முதல் ராஜாவாக கர்த்தரால் ஏற்படுத்தப் பட்ட சவுல் தான். இவன் கர்த்தரே மனஸ்தாபபட கூடிய அளவுக்கு என்ன செய்துவிட்டான் என்று இக்கட்டுரையின் வாயிலாக கற்றுக்கொள்வோம்.

இஸ்ரவேல் தேச ஜனங்கள் தங்களை தேவன் ஆளுகிறார் என்ற அறிவு கொஞ்சம் கூட இல்லாமல் எங்களுக்கும் மற்ற தேசத்தைப் போல ராஜா வேண்டும் என்று பரலோக ராஜாவிடமே கேட்டார்கள். தேவன் அவர்களுடைய பாவங்களை பொறுத்துக் கொண்டு, கோபத்திலே அவர்களுக்கு ஒரு ராஜாவை கட்டளை யிட்டார். அவன் தான் பென்யமீன் கோத்திரத்தானாகிய சவுல் இவன் தன் தகப்பனுடைய கழுதையை தேட போய் ராஜாவாக ஏற்படுத்தப் பட்டான்.

முதலில் இவனுக்கு ராஜ பதவி கொடுக்கப்பட்ட போது நடுங்கி ஓடிப்போய் ஒளிந்து கொண்டான், அவனை அங்கேயிருந்து பிடித்து இழுத்து வந்து அரச பதவியில் இவனை உட்கார வைத்தார்கள். கொஞ்ச நாட்களில் அரசியல் தந்திரங்களையும் பதவி ஆசையையும் கெட்டியாய் பிடித்துக் கொண்டு இவன் போட்ட ஆட்டம் கொஞ்ச நஞ்சமல்ல, இவனுடைய சந்ததியே பின் நாட்களில் அழிந்து போகும் அளவுக்கு ஆட்டம் போட்டான், இவனுடைய ஆரம்ப கால கட்டத்தில் தேவன் தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற முற்பட்ட போது அதை கொஞ்சமும் உணராமல் கொஞ்சம் கொஞ்சமாக தன்னை பிசாசினிடத்தில் விற்றுப்போட்டான். இதைக்குறித்து இக்கட்டுரையின் மூலமாக விளக்கமாக கற்றுக்கொள்வோம்.

## I. பலி செலுத்தினான்

சவுலுடைய ஆட்சியின் ஆரம்பத்தில் இஸ்ரவேல் ஜனங்களை சிறை பிடிக்கும் எண்ணத்தோடு பெலிஸ்தியர்கள் இஸ்ரவேல் மீது படையெடுத்து வந்தனர் (1சாமு 13:5) இந்த நேரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் கில்காலுக்கு சவுலிடம் வந்து சேர்ந்தனர். அவர்கள் போருக்கு புறப்படும் நேரம் வந்த போது ஆசாரியனாகிய சாமுவேல் வர தாமதமானபோது சவுல் ஆடுமாடுகளை கொண்டு வரச்செய்து தானே சர்வாங்க தகன பலியிட்டான் (1சாமு 13:9) தேவன் தம்முடைய நியாயப்பிரமாணத்திலே லேவியர்கள் தவிர யாரும் பலி செலுத்தக் கூடாது (எண் 3:10) என்று கட்டளையிட்டு இருக்கிறார். ஆனால் தேவனுடைய கட்டளையை கொஞ்சமும் மதிக்காமல் அதை காலின் கீழ் போட்டு மிதித்து, தானே பலி செலுத்தி ஜனங்களுக்கு தன்னை ஆசாரியனாக காண்பித்து கொண்டான், இப்படிச் செய்து தேவனுடைய கோபத்தை சம்பளமாக பெற்றான்.

இதைக்கண்ட சாமுவேல் சவுலைப்பார்த்து புத்தியீனமாய்ச் செய்தீர் உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளை யைக் கைக் கொள்ளாமற் போனீர். ...உம்முடைய ராஜ்யம் நிலை நிற்காது (1சாமு 13:13,14) என்று பரிசுத்த ஆவியினாலே எச்சரித்தும் கொஞ்சமும் கலக்கம் இல்லாமல் யுத்தம் செய்ய புறப்பட்டு போனான். இங்கு நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் தேவன் ராஜாவாக ஏற்படுத்தின சவுலே இருந்தாலும் அவன் அவருடைய பிரமாணத்தை மீறின போது அவனுக்குத் தண்டனையை உடனே அறிவித்தார். இந்த சவுலை போலத்தான் இன்றைக்கும் அநேகர் இருக்கிறார்கள், சவுலைப் போல புத்தியீனமான காரியங் களையே செய்து கொண்டு இருக்கிறார்கள்.

அப்படி என்ன அவர்கள் செய்கிறார்கள் என்கிறீர்களா இந்த சவுலைப் போல தேவனுடைய புதிய ஏற்பாட்டு பிரமாணத்துக்கு செவி கொடுப்பது என்பது அவர்களுக்கு வேப்பங்காயாக கசக்கிறது. தேவன் தம்முடைய குமாரனை அனுப்பி (யோவா 3:16) இந்த உலகத்திற்கு மீட்பையும் கொடுத்து அவர் மூலமாய் ஒன்றான மெய் சபையையும் அவர் கொடுத்து இருக்கும் போது (மத். 16:16-18, ரோம 16:16) அதைக் குறித்து கொஞ்சமும் கவலைப்படாமல் எந்த சபைக்கு போனால் என்ன எல்லா சபையிலும் வேதாகமத்தை தானே போதிக்கிறார்கள் என்று விதாண்டவாதம் பேசுகிறார்கள். அந்த உண்மை திருச்சபை அப்போஸ்தலர்களால் எருசலேமில் ஸ்தாபிக்கப் பட்டது (அப் 2அதி) என்று கூறினாலும் அதையும் அவர்கள் கேட்பதில்லை. அந்த சபை பரிசுத்த ஆவியானவராலே கிறிஸ்துவின் சபை (ரோம 16:16) என்று அழைக்கப்பட்டு இருக்கிறது என்று கூறினாலும் அதைக் குறித்து கொஞ்சமும் யோசிக்காமல் சவுலைப் போல அசட்டையே பண்ணுகிறார்கள்.

புதிய ஏற்பாட்டு கிறிஸ்துவின் பிரமாணத்தில் இரட்சிப்புக்கான சத்தியம் தெளிவாக சொல்லப்பட்டு இருக்கிறது, அதைக்குறித்து அவர்கள் யோசிக்காமல் புத்தியீனமான காரியத்தைத்தான் அநேகர் செய்து கொண்டு இருக்கிறார்கள். மனிதனால் தங்களுடைய கிரியை யின்படி ஏற்படுத்தப்பட்ட சபைகளுக்குத்தான் இன்றைக்கு செல்வாக்கு இருக்கிறது. இதைப் பின்பற்றக் கூடியவர்கள் கண்டிப்பாக தேவனு டைய நீதியான தீர்ப்பிலிருந்து தப்பமுடியாது.

## II. கொள்ளையின் மேல் பிரியம் வைத்தான்

எகிப்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்கள் விடுதலையாகி செங்கடலை கடந்து வெளியே வந்து, வனாந்தரத்தில் இளைப்பாறும் போது அமலேக்கியர்கள் இஸ்ரவேலின் பின் பாளயத்தை திடீரென தாக்கி பலவீனரையெல்லாம் வெட்டினார்கள் (யாத் 17:8-14, உபா 25:17-19) இதை தேவன் மனதில் வைத்து சுமார் நானூறு வருடங்கள் கழித்து சவுல் ராஜாவாக இருக்கும் போது அவனிடம் சாமுவேலை அனுப்பி "அமலேக்கை மடங்கடித்து அவனுக்கு உண்டான எல்லா வற்றையும் சங்கரித்து அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரை யும், ஸ்திரீகளையும் பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடு களையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்று போடக்கடவாய்" (1சாமு 15:3) என்று சொல்லி அனுப்பி னார்.

தேவன் சொன்ன வார்த்தைக்கு செவி கொடுப்பதைப் போல யுத்த வீரர்களை அழைத்து கொண்டு போய் அமலேக்கை மடங்கடித் தான் (1சாமு 15:7,8) ஆனால் ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல் தரமானவைகளையும், இரண்டாம் தரமானவைகளையும், ஆட்டுக் குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும் வைத்து, அற்பமானவை களும் உதவாதவைகளுமான சகல வஸ்துகளையும் முற்றிலும் அழித்துப் போட்டார்கள் (1சாமு 15:9) என்று வசனம் சொல்லுகிறது. இங்கேயும் தேவனுடைய வார்த்தைக்கு சவுல் செவி கொடுக்காமல் தன் இஷ்டபடியே செய்தான்.

இந்த காரியத்தை கண்ட தேவன் மனம் நொந்து போனவராக சாமுவேலிடம், நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமா யிருக்கிறது; அவன் என்னை விட்டு திரும்பி, என் வார்த்தைகளை நிறைவேற்றாமற் போனான் (1சாமு 15:11) என்று வேதனையோடு கூறினார்.

இவன் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் தன் கண்களை கொள்ளையின் பறக்க விட்டு அபகரித்து தேவனுடைய வார்த்தையை கொஞ்சமும் சட்டை பண்ணாமல் முதுக்கு பின்புறமாக தூக்கி போட்டு, சாமுவேலை கண்ட மாத்திரத்தில் பொறுப்பாக கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினான் (1சாமு 15:13) என்று மனம் கோணாமல் வாய் நிறைய பொய் பேசினான் (1சாமு 15:13) இதைக் கண்டு கோபமடைந்த சாமுவேல் அவனை கடுமையாக கடிந்து கொண்டு, தேவன் சொன்ன நீதியான தீர்ப்பையும் அவனுக்கு அறிவித்தான் (1சாமு 15:16-28) ராஜ்ய பாரம் உன்னை விட்டு பிடுங்கப்பட்டது என்றும் சாமுவேல் தீர்க்கமாக கூறினார்.

பிரியமானவர்களே இந்த சவுலைப்போல நாமும் அநேக வேளைகளில் கர்த்தர் சொல்ல கூடிய வேதாகம வார்த்தைகளை அரை குறையாகத் தான் நிறைவேற்றுகிறோம். பாவ மன்னிப்புக்கென்று முழுகிதான் ஞானஸ்நானம் எடுக்க வேண்டுமென்று கர்த்தர் சொல்லி யிருக்கும் போது (மாற் 16:16, அப் 2:38, மத் 28:16-19) இல்லை யில்லை தெளித்தலே போதுமென்று இருக்கிறவர்கள் கர்த்தரை மனஸ்தாபப்படுத்துகிறார்கள். உண்மையான திருச்சபையை கிறிஸ்து எருசலேமில் பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் மூலமாக ஸ்தாபித்தார் (அப். 2:1-47, அப் 20:28) என்று சொல்லும் போது கொஞ்சமும் அதைக் குறித்து சிந்திக்காமல் ஏதோ ஒரு மூலையில் மூளையில்லாதவர்கள் ஸ்தாபித்த சபைக்கு முக்கியத்து வம் கொடுப்பவர்கள் கர்த்தரை மனஸ்தாபப்படுத்துகிறார்கள். கிறிஸ்து தான் கட்டின சபைக்கு அவருடைய பெயரையே கிறிஸ்து வின் சபை (ரோம 16:16) என்று வைத்திருக்கும் போது மனுஷர் களுடைய பெயரையே வைத்திருக்க கூடியவர்கள் கர்த்தரை மனஸ் தாபப்படுத்துகிறார்கள், புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்கு செவி கொடுக்காமல் பழைய ஏற்பாட்டு காலவதியான உபதேசங்களை பின்பற்ற கூடியவர்களாள் கர்த்தர் இன்றைக்கும் மனஸ்தாப படக் கூடியவராக இருக்கிறார். சவுலுடைய விசயத்தில் கர்த்தர் மனஸ்தா பப்பட்டு அவன் தன்னுடைய வார்த்தையை தள்ளினதினாலே அதற்கு தண்டனையாக கர்த்தர் அவனைத் தள்ளி தாவீதை ஏற்படுத்தினார். நாமும் கர்த்தரு டைய வார்த்தையை தள்ளுவோம் என்றால் அவரும் நம்மை தள்ளுவார் ஆகையால் நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடப்போம்.

**III. அஞ்சனம் பார்க்கிறவர்களை தேடினான்**

சவுல் கர்த்தருடைய வார்த்தையைக் கைக் கொள்ளாமல் இருந்தபடியாலும், கர்த்தர் அடுத்த ராஜாவாக ஏற்படுத்தின தாவீதை கொல்லுவதற்கு முயற்சித்தபடியினாலும் கர்த்தர் இவனை முழுமை

யாகவே கைவிட்டு விட்டார். இந்த சூழ்நிலையில் பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலை பிடிக்க பெரிய சேனையோடே வந்து இறங்கினார்கள் (1சாமு 28:1) இதைக் கண்டு நடுங்கி போன சவுல் கர்த்தரிடத்தில் நான் ஜெயிப்பேனா என்று விசாரித்தான். ஆனால் வசனம் என்ன சொல்லுகிறது என்று பாருங்கள், “சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும் போது கர்த்தர் அவனுக்கு சொப்பனங்களினாலாவது, ஊரீமினா லாவது, தீர்க்கதரிசிகளினாலாவது மறு உத்தரவு அருளவில்லை” (1சாமு 28:6) என்கிறது.

பிரியமானவர்களே நாமும் கூட கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் தேவனிடத்தில் என்னதான் ஜெபித்தாலும் அங்கே யிருந்து நமக்கு எந்த பதிலும் வராது (நீதி 28:9) என்பதை சவுலின் மூலமாக நாம் இங்கு கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் சவுல், கர்த்தர் எனக்கு உத்தரவு கொடுக்கவில்லையென்றால் என்ன, எனக்கு என்ன வேறு ஆளா இல்லை என்பதை போல சவுல் தன் ஊழியக்கார ரை நோக்கி; அஞ்சனம் பார்க்கிற ஒரு ஸ்திரீயைத் தேடுங்கள் நான் அவளிடத்தில் போய் விசாரிப்பேன் (1சாமு 28:7) என்றான் என்று பரிசுத்த ஆவியானவர் கூறுகிறார். ஒரு காலத்தில் அஞ்சனம் பார்க்கி றவர்களை துரத்தி அடித்த சவுல் இன்றைக்கு அவர்களையே தேடி போனான் (1சாமு 28:7) என்பதை வாசிக்கும் போது இவனுடைய பாவத்தின் துணிகரத்தை என்னவென்று சொல்வது.

இன்றைக்கும் நம்மில் அநேகர் இந்த சவுலைப் போலதான் அஞ்சனம் பார்க்கிறவர்களும், நாள் பார்க்கிறவர்களுமாக தான் இருக்கிறோம். இது எவ்வளவு வெட்கமான விஷயம், பெரும்பா லான கிறிஸ்தவர்களுடைய திருமணமே முகூர்த்த நாள் பார்த்து தான் வைக்கிறார்கள். கிளிஜோசியம், எண்கணிதம், கைரேகை, கால் ரேகை, ராசிபலன்கள் போன்றவற்றை நம்பி எத்தனையோ பேர் அழிந்து போய் இருக்கிறார்கள். ஜோசியத்தில் வைக்க கூடிய நம்பிக்கை கூட ஜீவனுள்ள தேவன் மேல் நாம் நம்பிக்கை வைப்பது இல்லை.


சவுலுடைய மரணத்தை குறித்து வேதாகமம் அப்படியே சவுல் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளாமல் கர்த்தருக்குச் செய்த துரோகத்தினிமித்தமும் அவன் கர்த்தரைத் தேடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களை கேட்கும் படிக்குத் தேடினதினிமித்தமும் செத்துப் போனான் (1நாளா 10:13) என்று கூறுகிறது, நாமும் இந்த சவுலை போல தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் அஞ்சனம் பார்க் கிறவர்களை தேடுவோம் என்றால் அவருக்கு மனஸ்தாபத்தை ஏற்படுத்துகிறோம் என்றால் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக தப்பிக்க முடியாது, ஆகையால் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து தேவ ஆசீர்வாதத்தைப் பெறுவோம்.

**N. பர்னபாஸ், திருப்பூர்.**

# BIBLE MEDITATION

**TV PROGRAM**



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87
Postal Regn. No. Erode/26/2006-2008
Posted at Erode HPO on 20/21 of Every Month

**திருமறை ஆசான்**
**இதழ் ஆசிரியரின்**
**திருமறை தியானம்**
**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |
| தமிழன் TV | ஞாயிறு | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | திங்கள் | காலை | 6:30 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **ஏழு** பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

**Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.**
**Editor. S. Rajanayagam.**